991

விரோதி ஹூ
ஆனி மீ

ஸம்புடம்-8
ஸஞ்சிகை-6

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வா

விஷய ஸூசிகை

		பக்கம்
1	ஸ்ரீ அழகியசிங்கரின் பரோபகாரம் ...	158
2	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் ...	162
3	நற் போதுபோக்கு ...	165
4	உபய வேதாந்த ஐககண்ட்யம் ...	169
5	த்வை மாத்ர சப்த விசாரம் ...	172
6	பஞ்சாங்க ஸங்க்ரஹம் ...	174
7	மதுராலாபம் [நத்தின் சரித்ரம்] ...	175
8	ஸ்ரீ ஆசார்யாப்யுதம் ...	179
9	செய்திகள் ...	181
10	ஸம்பாதகரின் குறிப்புக்கள் ...	184

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

...னுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு
...டாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்

...க்கும் வ்யாஸங்க ளெல்லாம்,
...னுப்பப்படும் பக்ஷத்தில்,

...ன் வ்யா
...செய்ய

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 8	விரோதி ஸூ ஆனி மீ	ஸஞ்சிகை 6

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாதேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய க்ருபையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஶ்ரீ:

ஶ்ரீமதே ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீமதே ஶ்ரீவண் ஶடகோப ஶ்ரீ ஶ்ரீரங்கஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ அழகியசிங்கரின் பரோபகாரம்

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

ஸ்ரீ க்ருஷ்ணன் கோபர்களை அழைத்து யமுநாநதிக் கரையி லிருக்கும் வ்ருக்ஷங்களை அவர்களுக்குக் காட்டி,

“ பஶ்யதைதாந் மஹாபாகாந் பரார்தைகாந்தஜீவிதாந் ।
வாதவர்ஷாதபஹிமாந் ஸஹந்தோ வாரயந்தி ந: ॥
அஹோ ஏஷாம் வரம் ஜந்ம ஸர்வப்ராண்யுபஜீவநம் ।
ஸுஜநஸ்யேவ யேஷாம் வை விமுகா யாந்தி நார்திந: ॥
பத்ரபுஷ்பபலச்சாயாமூலவல்கலதாருபி: ।
கந்தநிர்யாஸபஸ்மாஸ்திதோக்மை: காமாந் விதந்வதே ॥
ஏதாவஜ்ஜந்மஸாபல்யம் தேஹிநாமிஹ தேஹிஷு ।
ப்ராணைரர்தைர்தியா வாசா ஶ்ரேய ஆசரணம் ஸதா* ॥ ”

[ஸ்ரீ பாகவதம் தஶமஸ்கந்தம்—அத். 23]

என்கிற ச்லோகங்களினால், ‘ இந்த மரங்கள் ஸர்வாம்ஶங்களினுலும் பரோபகாரத்தைச் செய்வனபோல, மனிதர்களும் எப்பொழுதும் தமது ப்ராணன்களினுலும் பொருள்களினுலும் புத்தியினுலும் வாகிந்த்ரியத்தினுலும் பிறர்க்கு உபகாரம் செய்யவேண்டியது’ என்று உபதேஶித்தான். இதனுல்தான் மநுஷ்ய ஜந்மம் பயன் பெற்றதாக ஆகிறது என்றும் சொன்னுன். இங்கு ‘ப்ராண’ ஶப்தமானது, ப்ராண வாயுவையும், அவைகளுக்கு இருப்பிடமான தேஹம் இந்த்ரியங்களையும் சொல்லுகிறது. இந்த விஷயம்,

“ ஶ்லோகார்தேந ப்ரவக்ஷ்யாமி யதுக்தம் க்ரந்தகோடிபி: ।
பரோபகார: புண்யாய பாபாய பரபீடநம் ” ॥

என்பதால், இது புண்யகார்ய மென்றும் சொல்லப்பட்டது. இப்படி மநுஷ்ய ஜந்ம ஸாபல்ய ஹேதுவாயும் புண்யமாயும் சொல்லப்பட்ட பரோபகாரங்கள், ஶாஸ்த்ராநுமத மல்லாத திருடன் துஷ்ட ஸ்த்ரீ முதலியவர் விஷயத்தில் செய்யப்பட்டால், அவை ஜந்ம ஸாபல்ய ஹேதுவாகமாட்டா ; புண்ய ஹேதுவு மாக மாட்டா வென்பது ஶாஸ்த்ரங்களின் தீர்மாநம்.

இங்கு, பரோபகாரத்தை ப்ராணன் அர்த்தம் புத்தி வாக் என்கிற நான்கு வஸ்துக்களால் செய்யவேண்டுமென்று சொன்னது, மற்றும் பசு பூமி அந்நம் வஸ்த்ரம் முதலியவைகளால் செய்யக்கூடிய உபகாரங்களுக்கும் உப

---

* ஶ்ரேய ஸமாசரேத் ஸதா—என்றும் பாடம்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

லக்ஷணம். இவற்றுள்: அந்நம் வஸ்த்ரம் அர்த்தம் முதலிய பொருள்கள் மூல மாகச் செய்யப்படும் உபகாரங்கள் பெரும்பாலும் அநித்யங்களான ஶரீர ரக்ஷண விஷயத்தில் உபயோகப்படுவதாலும், உபகாரத்தைப் பண்ணுகிறவர் களுக்கு உபகாரத்தைச் செய்வதால் உபகரிக்கப்படுகிற வஸ்துக்கள் குறைந்து போவதாலும், அம்மாதிரியான உபகாரங்கள் அல்பங்களாக நிச்சயிக்கப்படு கின்றன. தத்வஜ்ஞாநோபதேஶ ரூபமான உபகாரமோ வென்றால், மனிதர் களுடைய அஜ்ஞாநங்களைப் போக்கித் தத்வஜ்ஞாநங்களை உண்டாக்குவதாலும், நித்யர்களான ஜீவபரமாத்ம விஷயமாக ஸம்பாவிதமாகையினாலும், இவ்வுலகத் தில் பொய் களவு ஹிம்ஸை முதலிய கெட்ட கார்யங்களுடைய நிவ்ருத்திக் கும், ஸாது ஸத்காரம் முதலிய தர்மங்களுக்கும், அதன் மூலமாக ஸ்வர்க்க மோக்ஷங்களுக்கும் காரணமாவதோடு, ஜ்ஞாநத்தைப் பிறர்க்கு உபதேஶிப் பதால், உபதேஶிக்கப்படுகிற ஜ்ஞாநம் குறைந்து போகாது வளர்ந்து வரவும் காண்கையினால், அது மஹோபகாரமாக நிச்சயிக்கப்படுகிறது. இந்த மேன்மையை நினைத்து,

“ த்ரீண்யாஹுரதிதாநாநி காவ: ப்ருத்வீ ஸரஸ்வதீ ।
அதிதாநாநி தாநாநாம் வித்யாதாநம் ததோऽதிகம் ॥
ஸர்வேஷாமேவ தாநாநாம் ப்ரஹ்மதாநம் விஶிஷ்யதே ।
வார்யந்நகோமஹீவாஸஸ்திலகாஞ்சநஸர்பிஷாம் ॥
பூதாநாம் ப்ராணிந: ஶ்ரேஷ்டா:.... க்ருதபுத்திஷு ப்ரஹ்மவாதிந: ॥ ”

என்று மநுவும்,

“ ருதம் ச ஸ்வாத்யாயப்ரவசநே ச.... ஸ்வாத்யாயப்ரவசநே ஏவேதி
நாகோ மௌத்கல்ய: । தத்தி தபஸ்தத்தி தப: ”

என்று வேத புருஷனும் தத்வஜ்ஞாநோபதேஶத்தையே உயர்ந்த தர்மமாகத் தீர்மானித்தார்கள். இந்த வாசியறிந்த நம் பூர்வாசார்யர்களில் சில மஹா புருஷர்கள், தங்களுக்குக் கர்த்தவ்யமாகப் பகவதாஜ்ஞாஸித்தமான பரோப காரத்தைத் தத்வ ஜ்ஞாநோபதேஶ ரூபமாகவும், மற்றும் சில மஹான்கள் பிற்காலத்தில் ஜநித்தவர்களுக்கும் ஜ்ஞாநோபகாரத்தை உத்தேஶித்து க்ரந்த ரூப மாகவும், மற்றும் சில மஹோதார மஹா புருஷர்கள் இரண்டு விதமான உப காரங்களையும் செய்தருளினார்கள்.

இப்படி, ஸ்ரீ பாஷ்யகாராதி நம் பூர்வாசார்யர்களினால் அநுஷ்டிக்கப் பட்ட வைதிக வித்யோபதேஶ ரூபமான மஹோபகாரமானது, இக்காலத்தில் வ்ருத்தி கர்பிதர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களிடத்தில் நாள் தோறும் குறைந்து வருவதைக் கண்ட ஸ்ரீ அழகிய சிங்கர், அவ்வுபகாரத்தை வ்ருத்தி பண்ணவேணு மென்கிற திருவுள்ளத்தினால், வித்யார்த்திகளாய் வந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் எல்லாருக்கும் பூர்ணமான ஆஹார வஸ்த்ராதி தாநரூபமான உபகாரத்தோடு, தமது திருமேனி ஶ்ரமத்தை அநாதரித்து அவ்வித்யார்த்திகளுக்கு, ‘ஸாதயந்நிவ ஸர்வேஷாம் த்ரய்யந்தாய ஸம்ப்ரதிஸம்க்ரஹம்’ என்கிறபடியே ஔபநிஷத ஸித்தாந்த நிர்ணீதார்த்த ஸங்க்ரஹங்களான ஶாஸ்த்ரார்த்தங்களை யெல்லாம்

[illegible] ஸந்தோஹங்களினால் ஸர்வ காலத்திலும் உபதேசித்து, அதனால் உண்டான பரோபகாரத்தில் [illegible] யில்லாமல் அதை அதிகமாக வ்ருத்தி செய்ய வேணு மென்கிற அதிவிஶாலமான திருவுள்ளத்தினால் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவாராதந பரிஜந வர்க்கங்களுடைய நித்ய ததீயாராதநாதி கைங்கர்யார்த்தமாகவும், அவ்வெம்பெருமான் பாதமா மலர் சூடும் பத்தியில்லாத பாவமுள்ள ஜநங்களுடைய உஜ்ஜீவநார்த்தமாகவும், கள்ளி யுணங்கும் கடிய வெங்கானிடை ப்ரதேஶங்க ளெல்லாம் பொன்னடி நோவ நடந்து, தாம் ஆர்ஜநம் பண்ணின த்ரவ்யங்களைக் கொண்டு இந்தப் பாரத புண்ய பூமியில், ஸ்ரீ பாஷ்யகாரர் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்ற இடமாகையாலே 'த்வயம் விளைந்த திருப்பதி' யென்று ஸுப்ரஸித்தமான ஸ்ரீ மதுராந்தக மென்கிற திவ்ய க்ஷேத்ரத்தில் ஶதாதிகர்களான வித்யார்த்தி ரத்நங்கள் நிபிட மில்லாமல் நிராபாத ஸுகிகளாக நிரந்தர வாஸம் பண்ணிக்கொண்டு அபேக்ஷித ஸகல வித்யா க்ரஹணம் பண்ணும்படி அதிவிஶாலமாய் அத்யுந்நதமாய், 'மலை யார்ந்த கோலம் சேர் மணிமாடம்' என்னும்படி அதிமநோஹரமான ஒரு வித்யா ஶாலையை நிர்மாணம் செய்வித்து, அதில் அவ்வித்யார்த்திகளுக்கு ஆஹார வஸ்த்ராதி ஆநுகூல்யங்களையும் செய்வித்து, அங்கு ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பூர்ணர்களான பண்டித ரத்நங்களைக்கொண்டு அவ்வித்யார்த்திகளுக்கு அபேக்ஷித ஸகல ஶாஸ்த்ரார்த்தோபதேஶத்தை ஶாச்வதமாகச் செய்யும்படி செய்வித்து, அநிதர ஸாதாரணமான ஒரு மஹோபகாரத்தைச் செய்தருளினர்.

இப்படி இவ்வித்யாஶாலையில் வந்திருந்து வித்யாத்யயநம் பண்ண முடியாத வயோதிக புருஷர்களுக்கும் குடும்பிநிகளான ஸ்த்ரீகளுக்கும் தேஹாத்ம விவேக மூலகமான தர்மாநுஷ்டாநங்களில் ச்ரத்தையையும் பகவத் பக்தியையும் உண்டாக்கவேணு மென்று திருவுள்ளப் பற்றி, பற்பல பண்டித ச்ரேஷ்டர்களைக் கொண்டு வித்வான்களும் வருந்தி யறியவேண்டிய வேதாந்த விஷயங்களை அதிஸரள ம்ருதுள ஸுதா ஸத்ருஶங்களான ஸூக்திகளினால் மந்தமதிகளும் அநாயாஸமாக அறிந்துகொள்ளும்படி லௌகிக பாஷையாலே எழுதும்படி செய்து, அவ்விஷயங்களை 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்கிற பத்ரிகையில் அச்சிடச் செய்து, அதன் மூலமாய் அறிவிலா மனிசர்களும் பேரின்பம் பெற்று வாழ்ந்திருக்கும்படி மற்றொரு மஹோபகாரத்தைச் செய்தருளினர்.

நிற்க: ஸ்ரீ பாஷ்யகாரர் தமது அந்திம தஶையில் பரமைகாந்திகள் செய்யவேண்டிய பகவத் கைங்கர்யங்களுக்குள் ப்ரதாநதம கைங்கர்யமாக நியமித்தருளியதான 'ஸ்ரீ பாஷ்யத்தைப் படித்து ப்ரவர்த்திப்பித்தல்' என்கிற கைங்கர்யமானது, இக்காலத்தில் கலியினுடைய கொடுமையினால் '[illegible]' என்கிறபடியே பெரும்பாலும் லுப்த ப்ராயமாக ஆகிவிட்டபடியால், அப்படிப்பட்ட பாஷ்யாதிகாரிகளை வ்ருத்தி பண்ணவேணு மென்கிற ஆஸ்திக்யத்தாலும், பரமாசார்யாபிமத ப்ரதாந கைங்கர்யமான ஸ்ரீ பாஷ்ய ப்ரவர்த்தநத்தில் '[illegible]' என்கிறபடியே அத்யந்தாபிமதமான பகவத் கைங்கர்ய

மும் ஸ்ரீ பாஷ்யாதிகாரிகளான வித்வான்களுக்கு ஸம்மாநம் செய்வதனுல், 'தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் ந்ருப' என்றும், 'எத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம்' என்கிறபடியே பகவத் கைங்கர்யத்திலும் சிறந்ததான பாகவத கைங்கர்யமும், இவ்விரண்டிலும் சிறந்ததான பரமாசார்யரான ஸ்ரீ பாஷ்யகாராபிமத ப்ரதாந கைங்கர்யமும் தந்த்ரமாக அநுஷ்டிக்கப்படுவதைத் திருவுள்ளம்பற்றி ப்ரதி ஸம்வத்ஸரமும் உத்தராயண புண்ய காலத்தின் முதல் மாஸமான தை மாஸத்தில் ஸர்வ தேசங்களிலிருக்கும் ஸ்ரீ பாஷ்யாதிகாரிகளான பரமைகாந்திகளை அவர்களுக்கு ச்ரமமில்லாதபடி வரவழைத்து 'மாலோல வித்வத் ஸபா' வேதாந்தார்த்த விசார வ்யாஜத்தினுல் அவ்வித்வான்களுக்குத் தேனும் பாலும் அமுதுமாகித் தித்தித்திருக்கும் யதீச்வர ஸரஸ்வதீ ரஸாஸ்வாதத்தை யதாமநோரதம் பண்ணிவைப்பது மாத்ரமின்றிக்கே,

"நாஹம் ததாத்³மி யஜமாந ஹவிர்விதாநே
ச்யோதத்³க்⁴ருதப்லுதமத³ந் ஹுதபு⁴ங்முகே²ந ।
யத்³ப்³ராஹ்மணஸ்ய முக²தஶ்சரதோऽநுகா⁴ஸம்
துஷ்டஸ்ய மய்யவஹிதைர்நிஜகர்மபாகை: ॥"

என்கிறபடியே பகவதத்யந்தாபிமதமானதாய், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய கடாக்ஷ ஸுதாலஹரீ வ்யாமிச்ரமாக இருக்கையாலே மஹா பரிசுத்தமாய், ஸ்ரீ அழகியசிங்கருடைய ப்ரீதி ரஸாம்ருதமே துரிதமாய் விவித விசித்ர ஷட்ரஸ ஸம்பூர்ண பக்ஷ்ய வர்க்கங்களோடு கூடின ம்ருஷ்டாந்ந போஜநத்தையும் செய்வித்து, சந்தந புஷ்ப தாம்பூல அர்த்த ஸம்பாவநைகளாலும் அநவரத ப்ரிய பாஷணங்களாலும் அவ்வித்வந்மணிகளை உபசரிக்கையாலே அவ்வுபசார ஜநித ஸந்தோஷத்தால் அவ்வித்வான்கள் 'நைவம்விதோ ... ந அயாவஜ்ஜீ ... காது' என்கிறபடியே கவிபாடும்படி பண்ணி, பாஷ்யாதிகாரிகளான வித்வான்களுக்கு மஹோபகாரத்தையும், அதனுல் ஸ்ரீ பாஷ்யகாராபிமத ப்ரதாந கைங்கர்யத்தையும், அதனுல் மாலோலனென மஹா ஸ்வாமியினுடைய அந்தர்யாமிகளையும் ஆராதித்தருளுகிருர்.

இவைகளோடு, பொதுவான ஸர்வ ஜனங்களுக்கும் ஆஸ்திக்யத்தையும், அதனுல் தர்மாநுஷ்டாந ருசியையும் பகவத் பக்தியையும் உண்டாக்கவேணுமென்கிற திருவுள்ளத்தினுல், அதற்கு யோக்யர்களான பல பண்டிதர்களைக் கொண்டு பல விடங்களிலும் பக்தி ஆஸ்திக்யம் முதலியவைகளை வ்ருத்தி பண்ணக்கூடிய சாஸ்த்ரார்த்தோபந்யாஸங்களைச் செய்யும்படி பண்ணிப் பரோபகாரத்தைச் செய்தருளுகிருர். இப்படிப் பல படியாலும் உலகத்தை உஜ்ஜீவிப்பிக்கும் ஆசார்யர்களைக் குறித்தன்றே 'ஸாக்ஷாந்நாராயணோ...... பாணிநா' என்று சாஸ்த்ரங்கள் உத்கோஷிக்கின்றன. இதனுல் ஸ்ரீ அழகியசிங்கருடைய பரோபகார ஸ்வபாவமாகிற மஹா குணம் ப்ரகாசிதமாகிறது.

ஸ்ரீரங்கேசயதீந்த்ராணாம் ஸத்குணாகரஷஷ்டிதமா ।
ஸ்ரீநிவாஸாய ... ஸத்குணா ... ॥

श्रीः

श्रीमते श्रीलक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(எட்டாம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி]

மஹாமோஹர்:—[கோபத்தாலும் வெறுப்பாலும் கண்கள் சிவந்து காலால் கால்பீடத்தை உதைத்துப் பற்களால் உதட்டைக் கடித்துக்கொண்டு]

"ब्रह्माण्डकरण्डगह्वर [illegible] यशः
धिग्धिक् [illegible]।
धिक् [illegible] धिक्
[illegible] नमः ॥"

என்கிறார். உதாத்த ராகவ நாடகத்தில் ராவணனுடைய ஒரு ச்லோகம் காவ்ய ப்ரகாசாதிகளில் உதாஹரிக்கப்பட்டுள்ளது இங்கு ஸ்வாமி திருவுள்ளத்தில் உள்ளதென்பது ஸ்பஷ்டம். லங்கா யுத்தத்தின் மத்தியில்,

"न्यक्कारो ह्ययमेव मे यदरयस्तत्राप्यसौ तापसः
सोऽप्यत्रैव निहन्ति राक्षसकुलं जीवत्यहो रावणः।
धिग्धिक् शक्रजितं प्रबोधितवता किं कुम्भकर्णेन वा
स्वर्गग्रामटिकाविलुण्ठनवृथोच्छूनैः किमेभिर्भुजैः ॥"

என்பது ராவணன் பேச்சு. எனக்கும் சத்ருக்களென்று சொல்லிக்கொள்பவர் இருப்பதே எனக்குப் பெரிய அவமானம். அதிலும் இவன் (ராமன்) தபஸ்வி; सोऽप्यत्रैव निहन्ति राक्षसकुलं—அவனும் இங்கேயே வந்து கூட்டங் கூட்டமாக ராக்ஷஸ குலத்தைக் கொல்கிறான். जीवत्यहो रावणः—ஐயோ! இன்னமும் ராவணன் ஜீவித்திருக்கிறேனே! இனி இந்த்ரனை ஜயித்த இந்த்ரஜித்தால்தான் என்ன? धिग्धिक्—சீச்சீ. கும்பகர்ணனை எழுப்பித்தான் என்ன? ஸ்வர்க்க லோகமாகிய க்ஷுத்ர க்ராமங்களைச் சூறையாடி அடக்கியதால் வீணே மதித்துப் பருத்திருக்கும் இக்கைகளால்தான் என்ன பயன்? ஸீதைதான் கொளுத்தக்கூடுமென்று சொல்ல வேண்டுமோ? நானே கொளுத்தி விடுகிறேன். धिग्धिक्—சுடு சுடு; கொளுத்து; 'சீச்சீ சீச்சீ' என்று பல திக்வாதங்கள். இப்படி ராவணனுடைய 'சீச்சீ' சொற்கள்போல, இங்கும் மஹாமோஹனுடைய தன்னையே வெறுக்கும் 'திக்' சொற்கள்.

ब्रह्माण्डकरण्डगह्वर [illegible] यशः—ப்ரஹ்மாண்டமே ஒரு கர்ப்பூரச் சிமிழ்போல இவனுக்கு மிகச் சிறியதாகத் தோன்றுகிறது.

எல்லையற்ற மஹத்தா யிருந்தால் தன் ஜயஶக்திக்குத் தக்கதாயும் தன் ஜய யஶஸ்ஸு விஶாலமாகப் பரவவும் ஸௌகர்யமா யிருக்கும். தன் யஶஸ்ஸி னுடைய விஸ்தாரத்திற்கு ப்ரஹ்மாண்டம் முழுவதும் போதாதென்று கர்வம். கீர்த்தி என்பது வெண்மை நிற மென்றும் அது எங்கும் தானே பரவு மென்றும் கவிகள் வர்ணிப்பர். கர்ப்பூரம் வெளுப்பு; வாஸனை யுள்ளது; அதன் வாஸனை வெகுதூரம் தானாகப் பரவுவது. தன்னுடைய ஜய யஶஸ்ஸைக் கர்ப்பூரச் சிமிழ் போன்ற ப்ரஹ்மாண்ட மென்னும் பெட்டியில் அடைத்து வைத்தாலும் அது கர்ப்பூர வாஸனையைப்போல வெளியேயும் உடைத்துக்கொண்டு ஓடிப் பரவு கிறது. [புண்யச் செயல்களின் புண்யகீர்த்தி வாஸனை வெகு தூரம் வீசும் என்று வேத மோதுகிறது. இந்தப் பாபிஷ்டன் தன் கொடிய பாபச் செயல் களின் கந்தம் வெகு தூரம் வீசுகிற தென்கிறான். இவன் செயல்களின் வாஸனை வெகு தூரம் வீசுவதே. ஆனால் அது துர்வாஸனை. அந்தத் துர்வாஸ னையை இவன் கர்ப்பூர வாஸனைக்கு ஒப்பிடுகிறான். அது 'கர்ப்பூரம் நாறுமோ கமலப் பூ நாறுமோ' என்கிறான். துர்வாஸனை யென்னும் பெண்பாத்ரம் இவன் பரிவார மென்று இந்த அங்கத்தின் தொடக்கத்திலேயே கூறப்பட்டது.] இத் தனை யஶஸ்ஸை நான் ஸம்பாதித்து என்ன பயன்? ஸ்வர்க்க லோகத்திற்கு அதி பதியான இந்த்ரன் எனக்கு அடங்கி ஒடுங்கி வஶப்பட்டிருப்பது விச்வ ப்ரஸித்த மல்லவோ? அவன் அப்ஸரஸ்ஸுகளுக்கு வஶப்பட்டிருப்பதோடு மஹர்ஷி பத்னி விஷயத்திலும் அவன் மோஹ மடைந்து எனக்கு அடிமையானது அவன் நெற்றியிலேயே நூறு கண்கள் ரூபமாக ஒட்டியிருக்க வில்லையோ? அவன் மஹா மோஹ பாத பட னென்று அவன் நெற்றியிலேயே விளங்குகிறது. இது அவனுக்கு லலாட லிகிதம். இரண்டு மோஹ வஶமான கண்கள் ஶத மாந மாக மஹாமோஹமாய் நெற்றியில் பெருகின. பிறரைப் பழித்துப் பழித்து நான் அவமாநமாய் எத்தனை பேசியிருக்கிறேன்! இப்பொழுதே நானே என்னைப் பழித்துக்கொள்ளும் காலம் வந்ததே! எனக்கும் எதிரிகள் கிளம்பி நடையாடுகிறார்களென்ற ஶப்தத்தை நான் எப்படிக் காதால் கேட்பது? இத்தனை தாழ்மையான ஸ்திதிக்கு வந்துவிட்ட எனக்கே ஒரு கும்பிடு. 'துர்ஜ் ஜநர்களில் முதல்வனாகிய எனக்கு நமஸ்காரம்' என்று ஸுபாஷித நீவியின் தொடக்கத்தில் கூறியதையும் நினைக்கவேண்டும். 'ஊஹ்ரீம் நமோஸ்து கவயே நிரவத்ரபாய' என்று ஸ்தோத்ர ரத்நத்தில் கூறியதையும் நினைக்க வேண் டும். 'ப்ரஹ்மாதி தேவர்களுக்கும் துதிக்க அஶக்யமான பகவந் மஹிமையைத் துதிக்க யத்நப்படும் வெட்க மில்லாத கவியான எனக்கும் ஒரு கும்பிடு' என் பது ஸ்ரீ ஆளவந்தார் நைச்யாநுஸந்தாநம்.

[ஆலோசித்துப் பெருமூச்சுடன்] ப்ரியே! ஶத்ருக்களான இந்தப் புத்ரர்களால் ஏமாற்றப்பட்டு நம் தகப்பனாகிய ஜீவன் இன்பங்களை யெல்லா மிழந்து படும் ஸங்கடங்களை நினைத்து நினைத்து நான் மிக வருந்துகிறேன்.

“ ம தஜுஹொ த-ஸுபாஷ ம ஜய-இய வ ஶள அ கயா

ம ம ந தயா ந-ஷெவ மணிகாவமிணீ கி நிமெஹை: ।

[illegible]
[illegible] ॥ ”

[ஜீவனுடைய புத்தியிலிருந்து பிறந்த புத்ர பௌத்ரர்களில் ஸாத்விகர்கள்—விவேகர், ஶமம், தமம், வைராக்யம், க்ஷமை முதலிய நற்குணங்கள். ராஜஸ தாமஸர்கள்—காமம், கோபம், மோஹம் முதலிய துர்க்குணங்கள். மூக்குணங்களுமுடைய மனத்திலிருந்து பிறக்கும் குலத்தில் ஸத்வ குணத்தின் மூலமாகப் பிறந்தவை நற்குணங்கள்; தமோ குணத்தாலும் ரஜோ குணத்தாலும் பிறந்தவை துர்க்குணங்கள். எல்லாம் ஒரு குலம்தான். ஜீவனே இவ்வெல்லோருக்கும் குல கூடஸ்தரான குலபதி.]

தகப்பனுக்கு அநாதி காலமாகக் கோடிக் கணக்கான விஷய போகங்களை அநுபவிக்க ஸமர்ப்பித்து வந்து நாம் அவரை மிக இன்ப ரஸாநுபவத்தோடு ஸுகிக்கச் செய்து வந்திருக்கிறோம். இப்பொழுது அவரை இன்ப விஷயங்களையே கண்ணெடுத்துப் பார்க்கலாகா தென்றும், காமங்களை யெல்லாம் அடியோடு துறந்துவிடவேண்டு மென்றும் கட்டுப்படுத்தி, கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு ஸுக மிருக்கிறதென்று அவருக்குப் போதித்து அவரை ஏமாற்றுகிறார்கள்; உண்மை விசாரங்களில் தகப்பனை இறக்குவதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்வதற்குக் கண்கள் முதலியவற்றால் காணக்கூடிய ஒரு ருஜுவு மில்லையென்று அவர்களே சொல்லுகிறார்கள். அவர்கள் உபதேஶம் வீணே; வீண் என்பதற்குச் சில உபமானங்களை இந்த ச்லோகத்தில் மஹாமோஹன் கூறுகிறான். அவை யாவையெனில்:—வெள்ள ஜலம் ஓடிப் போய்விட்ட பிறகு அணை போட்டு ஜலத்தைத் தேக்கப் பார்ப்பது வீண். ‘கதேஜலெ ஸேதுபந்தநம்’ என்று பழமொழி. ‘கதஜலஸேதுபந்தநம்’ என்பது அந்த உபமானம். யானையை ஸ்நானம் பண்ணிவைத்த பிறகு உடனே மண்ணை யெடுத்து மேலே போட்டுக்கொள்வது அதன் ஸ்வபாவம்; ‘கஜ ஸ்நானம்’ வீணென்பர். ‘கஜஸ்நாநவதவைபல்யம்’ என்பது அந்த உபமானம். ஆகாயத்தின்பேரில் சுண்ணாம்புப் பூச்சுப் பூச யத்னம் செய்வது வீணே; ‘ககநதலநலேபநம்’ என்பது அந்த உபமானம். ‘வேஶியைக் கல்யாணம் செய்துகொள்வதுபோல’ என்ற உபமானம், ‘கணிகாவரிணீதி’ என்பதால் கூறப்படுகிறது; அன்றன்று வரும் காமுகர்களைக் கணக் கெண்ணிக்கொண்டு பணத்தைப் பெருக்கி எண்ணிக்கொண் டிருப்பவள் கணிகை; அன்பிருப்பதுபோலப் பாஶாங்கு செய்து பணம் பறிப்பவர். ‘அட்டைகள்போல் சுவைப்பர்’, ‘கண்டபோது பட்டதல்லால் காதல்மற்று யாதுமில்லை’ என்பர். ஹ்ருதயத்தை ஆகாஶமென்பர். அவர்களுடைய சூந்யமான வெட்ட வெளியான ஹ்ருதயாகாஶத்தில் ஸ்நேஹப் பசையைப் பூச முடியாது. அவர்கள் ஹ்ருதயத்தில் ஸ்நேஹமே ஒட்டாது. ஸாத்விகப் பெரியோர் வைராக்ய உபதேஶத்திற்குப் பணிக்கும் உபமானங்களை மஹாமோஹன் தனக்கு அநுகூலம் போலக் கூறுகிறான். யானையை எத்தனை தடவை அழுக்குத் தேய்த்து ஸ்நானம் செய்வித்தாலும், அது திரும்பவும் திரும்பவும் அழுக்கையே வாரி மேலே போட்டுக் கொள்ளும். மன மென்னும் கஜத்தை எத்தனை தடவை மலமறக் கழுவினாலும்

அது திரும்பவும் விஷய இன்பங்களையே நினைந்து அந்த மலங்களால் அழுக்கடையும். வேசியை ஒருவனிடத்திலேயே ஆசை வைக்கும்படி கட்டுப்படுத்துவது எப்படி அஸாத்யமோ, அப்படியே மனத்தைப் பகவானிடம் மட்டும் நிறுத்த முயல்வது அஸாத்யம். நிறுத்த நிறுத்தத் திரும்பவும் விஷயங்களிலேயே அது பட்டி மேயத் தொடங்கும். ஹ்ருதய ஆகாசத்தில் பகவானிடம் ஸ்நேஹத்தைப் பூசி அங்கேயே ஒட்டியிருக்கும்படி செய்வது ஸாத்யமல்ல. விஷயங்களில் ஆசையை ஒழித்து வைராக்யத்தைப் பயிற்சி செய்ய முயல்பவர், விஷயங்களைக் காண்கையில் ஆசை முற்றி அதைத் தடுக்க முடியாமல் அவற்றின் இன்ப வெள்ளத்தில் மூழ்கி எல்லாம் கெட்டுப்போன பிறகு மனத்தைக் கட்டுப்படுத்தப் பார்ப்பர். அதற்கு முன்பே அந்த இன்பங்களில் இறங்காமல் தடுத்திருக்கவேண்டும். இன்ப போக வெள்ளம் ஓடும் பொழுதே அதனை அணைபோட்டுத் தடுத்திருக்கவேண்டும். இதற்கு முன்னலோசனை வேண்டும். விஷய போகங்களில் இழிந் தழிந்தபிறகு வருந்தப்படுவதில் அத்தனை பயனில்லை. 'குலபதி' என்பது, ஒரு குடும்பத்திற்கு மூல புருஷரான கூடஸ்தரைச் சொல்லும். அநேகம் ஶிஷ்யர்களுக்கு வேத வேதாங்கங்கள் முதலிய ஶாஸ்த்ரங்களைக் கற்பித்துக்கொண்டு தம் ஆச்ரமத்தில் வைத்துப் போஷித்து வருபவர் குலபதியாவர். அப்படிப்பட்ட குலபதியான மஹாசார்யராகச் செய்யவேண்டு மென்பது விவேகருடைய ஆசை. குலத்தைப் பெருக்கிக்கொண்டு நித்யமும் ஸம்ஸாரிகளாகவே உழலவேண்டு மென்பது மஹாமோஹனது ஆசை. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

நற் போதுபோக்கு

[பாகவத குசேலனும் ராமாயண குசேலனும்]

[ஸ்ரீ உப. K. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், பெருமாள்கோவில்]

பாகவத குசேலன்.—இவர் அவந்தி நகரத்தில் அவதரித்தவர்; ஸுதாமா என்பது இவரது இயற்பெயர். குத்ஸிதமான (சிதைந்த) ஆடையை அணிந்திருந்தமையால் இவர் குசேலன் என்று பெயர் பெற்றார். இக்குசேலன் த்வாரகா நாதனான ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவுடன் ஸாந்தீபிநி என்னும் மஹர்ஷியினிடம் பயின்றவ ரென்று சொல்லப்படுகிறது. இக்குசேலன் க்ருஷ்ண பக்தனா யிருந்து முக்தி பெற்றமையும், அவரது மற்றை வரலாறுகளும் ஸ்ரீமத் பாகவதத்தில் விஶதமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ராமாயண குசேலன்.—ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் காலத்திலும் பரம பாகவதனான த்ரிஜடர் என்ற ராமாயண குசேலர் ஒருவர் இருந்ததாக ஸ்ரீமத்

ராமாயணத்திலிருந்து அறிகிறோம். குசேலரது வஸ்த்ரம் போன்றே இவரது வஸ்த்ரமும் சிதைந்து கிழிந்திருந்தது; குசேலர் மனைவிபோன்றே த்ரிஜடர் மனைவியும் மஹா பாகவதோத்தமி; பாதிவ்ரத்யமும் பதி பக்தியும் பரிசுத்த ஒழுக்கமும் கொண்டவள். ஆனால், இருபத்தேழு நக்ஷத்ரங்கள் போன்ற இருபத்தேழு புத்ரர்களை யுடையரா யிருந்த குசேலருக்கு மாறாக, த்ரிஜடர் எண்ணிறந்த புத்ர பாக்யத்தை யுடையவரா யிருந்தார். ஆதலின் பாகவத குசேலரைக் காட்டிலும் இவர் மிக்க தரித்ர ரென்பது நன்கு விளங்குகிறது.

பாகவத குசேலராகிய ஸுதாமா அவந்தி நகரி லிருந்துகொண்டு பகவத் த்யாநத்துடன் உஞ்ச வ்ருத்தி செய்துகொண்டு குடும்ப ஸம்ரக்ஷணம் செய்து வந்தார். பிங்கள வர்ண முடையவரும் கார்க்க குலத்திற் பிறந்தவருமான த்ரிஜடரோவெனில், கோஸல தேசத்துக் கருகிலுள்ள வநத்தி லிருந்து கொண்டு அங்குச் சிந்தியுள்ள தாந்யங்களைப் பொறுக்கியும், கோடாலி மண்வெட்டி துறட்டுக்கோல் ஆகிய இவைகளைக் கொண்டு பழம் முதலியவற்றை க்ரஹித்தும், எண்ணிறந்த சிசுக்கள் நிறைந்த தம் குடும்பத்தை ஸம்ரக்ஷணம் செய்து வந்தார். ஆஹாராதிகள் கிடைக்காமல் சிற்சில ஸமயங்களில் இவர் குடும்பம் குழந்தைகளுடன் பட்டினி கிடப்பதுண்டு. இதிலிருந்து, ஸ்ரீ க்ருஷ்ணன் காலத்துக் குசேலருக்கும் ஸ்ரீராமன் காலத்துக் குசேலருக்கும் உள்ள தாரதம்யம் நன்கு விளங்கும்.

ஸ்ரீராமபிரான் தொத்தலர் பூஞ் சுரிசுழற் கைகேசி சொல்லால் தொன்னகரம் துறந்து வநவாஸம் செய்யப் புறப்படுகையில், தமக்குரிய த்ரவ்யங்களையெல்லாம் ப்ராஹ்மணர்களுக்கு ஏராளமாகத் தாநம் செய்தார். வஸிஷ்ட புத்ரராகிய ஸுயஜ்ஞரை லக்ஷ்மணனைக் கொண்டு அழைப்பித்து, அவருக்குத் தோள்வளை குண்டலம் கடகம் முதலிய திவ்யாபரணங்களையும், அநேக ரத்நம் முதலியவற்றையும் கொடுத்து அவரைப் பூஜித்தார். மற்றும் ஶத்ருஞ்ஜயம் என்னும் யானையை, ஆயிரம் யானைகளோடு கொடுத்து அவரை மகிழ்வித்தார். ஸீதா தேவி, தனது ஹாரம் தோள்வளை ஒட்டியாணம் ரத்ந கசிதமான மஞ்சம் முதலியவற்றை அவருக்குக் கொடுத்து உபசரித்தாள். அகஸ்த்ய குமாரர்க்கும் விச்வாமித்ர குமாரர்க்கும் ஏராளமான த்ரவ்யங்களை அளித்தார். வேதாத்யயநம் செய்த ப்ராஹ்மசாரிகளுக்குப் பசுக்கள் தாந்யங்கள் முதலியவற்றைக் கொடுத்து அவர்களை த்ருப்தி செய்வித்தார். இவ்வாறு ஸ்ரீராமனது த்ரவ்யங்கள் யாவும் ஸத்பாத்ரத்தில் விநியோகிக்கப்பட்டன.

இப்படி யிருக்கும்போது, தரித்ரத்தால் பீடிக்கப்பட்ட தருணியான த்ரிஜடரின் மனைவி இச்செய்தியை உணர்ந்து, மக்களை அருகில் வைத்துக் கொண்டு, அந்த ப்ராஹ்மணக் கிழவரைப் பார்த்து,

" 𑌉𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌫𑌾𑌲𑌂 𑌕𑍁𑌦𑍍𑌦𑌾𑌲𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌮𑌮 𑌦𑍍𑌵𑌿𑌜 ।
𑌰𑌾𑌮𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯 𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌂 𑌯𑌦𑌿 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥ "

[நாதா! நான் சொல்வதைக் கேளும்; கோடாலியையும் மண் வெட்டியையும் போட்டுவிட்டு, தர்ம முணர்ந்த ராமனிடம் (நமது தாரித்ர்யத்தைத்) தெரிவியும்;

தெரிவித்தால் (நமது தரித்ரத்துக்குத் தகுந்தபடி அவரிடமிருந்து) ஏதேனும் ஒரு பொருளைப் பெறுவீர்] என்று அவரைத் தூண்டினாள். இதைக் கேட்ட மஹா ஸாத்விகோத்தரரும் பரம பாகவதருமான த்ரிஜடர், மிகவும் சிதைந்து கிழிந்துள்ள ஒரு வஸ்த்ரத்தால் தம் உடம்பை ப்ரயத்நப்பட்டு மறைத்துக்கொண்டு ஸ்ரீராமனது க்ருஹம் நோக்கி விரைந்து வந்தார். பாகவத குசேலராகிய ஸுதாமா, பழைய ஸ்நேஹத்தை யொட்டி த்வாரகையை அணுகினதும், த்வாரபாலகர் அவரை உள்ளே செல்ல விடாமல் தடுத்தது போல் இல்லாமல், இம்மஹான் த்வாரபாலகரின் கடுமொழிகளின்றியே ஸ்ரீராமனது அரண்மனைக்குள் நுழைந்தார். நுழைந்ததும் ஸ்ரீ ரகுநந்தநனைக் கண்டு அஞ்ஜலிபந்தத்துடன்,

“ நிர்தநோ பஹுபுத்ரோ஽ஸ்மி ராஜபுத்ர மஹாயஶ: ।
உஞ்சவ்ருத்திர்வநே நித்யம் ப்ரத்யவேக்ஷஸ்வ மாமிதி ॥ ”

[பெரும்புகழ் படைத்த ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனே ! நான் தநமில்லாதவன் ; பரம தரித்ரன் ; பல பிள்ளைகளைப் பெற்றவன் ; அன்றன்று வநத்தில் சிந்தியுள்ள தாந்யங்களைப் பொறுக்கிக் கொணர்ந்து அதனால் ஜீவிப்பவன் ; என்னைக் கடாக்ஷிக்கவேண்டும்.] என்று மிகவும் தைந்யத்துடன் தமது நிலையைத் தெரிவித்தார். இங்கிதஜ்ஞரும் கொடைவள்ளலுமாகிய கருணாமூர்த்தி ப்ராஹ்மணோத்தமரின் இரக்க மொழிகளைக் கேட்டு அவருடைய ப்ரஹ்மதேஜோ பலத்தை அங்குள்ளவர்களுக்குக் காட்ட விரும்பி,

“ தமுவாச ததோ ராம: பரிஹாஸஸமந்விதம் ।
கவாம் ஸஹஸ்ரமப்யேகம் ந து விஶ்ராணிதம் மயா ॥
பரிக்ஷிபஸி தண்டேந யாவத்தாவதவாப்ஸ்யஸி । ”

[ப்ராஹ்மணோத்தமரே ! ஓராயிரம் பசுக்களையேனும் நான் உமக்குத் தந்தேனில்லை. (ஆதலால்) பசுமந்தையில் உமது கைத் தண்டத்தைச் சுழற்றி எறியும். அதற்குள் அடங்கிய பசுக்களை யெல்லாம் நீர் பெற்றுக்கொள்ளலாம்.] என்று பரிஹாஸம் தோன்றக் கூறினார். உடனே ப்ராஹ்மணன் கோக்கள் அதிகம் கிடைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் தனது கந்தல் வேஷ்டியை இடையில் இறுகச் சுற்றிக்கொண்டு மிக்க வலிமையுடன் தமது கைத் தண்டத்தைச் சுழற்றி யெறிந்தார். அவர் சுழற்றி எறிந்த வேகத்தால் அத்தண்டம் பன்னிரண்டு யோசனை நீளமும் மூன்று யோசனை அகலமுமுள்ள அயோத்யா நகரத்தையும் தாண்டி, ஸரயூ நதியையும் கடந்து, கடைசிப் பசுவும் ஒரு வ்ருஷபமும் இருக்கும் இடத்தில் வந்து வீழ்ந்தது.

இதைப் பார்த்ததும் ஸ்ரீ ராமபிரானும் மற்றுமுள்ளோரும் ப்ராஹ்மணரின் ப்ரஹ்ம தேஜோ பலத்தைக் கொண்டாடினார்கள். ஸ்ரீ ராமபிரான் மிக்க ஸந்தோஷத்தினால் அவரைக் கட்டிக்கொண்டு, அத்தனை கோக்களையும் கோபாலர்களைக் கொண்டு த்ரிஜடரின் ஆச்ரமத்தில் கொண்டுசேர்க்கும்படி ஆஜ்ஞாபித்தார். அவ்வாறே அவைகள் த்ரிஜடரின் ஆச்ரமத்தில் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டன. ஸ்ரீ ராமன் ப்ராஹ்மணரை ஸமாதாநப்படுத்தி,

" 𑌮𑌨𑍍𑌯𑍁𑌰𑍍𑌨 𑌖𑌲𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌪𑌰𑌿𑌹𑌾𑌸𑍋 𑌹𑍍𑌯𑌯𑌂 𑌮𑌮 ।
𑌇𑌦𑌂 𑌹𑌿 𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑌵 𑌯𑌦𑍍𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌾 𑌮𑌯𑌾 ।
𑌇𑌮𑌂 𑌭𑌵𑌾𑌨𑌰𑍍𑌥𑌮𑌭𑌿𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌿𑌤𑍋 𑌵𑍃𑌣𑍀𑌷𑍍𑌵 𑌕𑌿𑌂 𑌚𑍇𑌦𑌪𑌰𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌯𑌤𑌿 ।
𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌨 𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑌿 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌣𑌾 𑌧𑌨𑌂 𑌹𑌿 𑌯𑌦𑍍𑌯𑌨𑍍𑌮𑌮 𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 ।
𑌭𑌵𑌤𑍍𑌸𑍁 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑍇𑌨 𑌤𑌨𑍍𑌮𑌯𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌯𑌶𑌸𑍍𑌕𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ "

[ஸ்வாமீ! இவ்வாறு (தடியைச் சுழற்றி எறியும்படி சொல்லி) நான் வேடிக்கையாய்ச் சிரித்ததைப்பற்றித் தேவரீர் கோபித்துக் கொள்ளக் கூடாது. இப்போது ஏற்பட்ட மிகவும் அதிஶயமான உமது தேஜோபலத்தை அறிய விரும்பி நான் உம்மை இக்கார்யம் செய்யும்படி தூண்டினேனேயன்றி வேறு எக்காரணத்தாலுமன்று; இன்னும் ஏதேனும் வேண்டுமானாலும் கேளும்; கொடுக்கிறேன்; ஸத்யமாய்ச் சொல்லுகிறேன். எனது தநம் முதலியவை ப்ராஹ்மணர்களுக் கென்றே இருக்கின்றன. எது வேண்டுமானாலும் உமக்குத் தடையின்றிக் கொடுக்கிறேன். நான் ஸம்பாதித்துள்ளவை யாவற்றையும் உம்மைப் போன்ற மஹாத்மாக்களுக்குக் கொடுப்பதால், அது எனக்குக் களிப்பையும் புகழையும் விளைக்கும்.] என்றார். த்ரிஜடர் ரகுபுங்கவனது அன்பு ததும்பும் சொற்களைக் கேட்டுக் களித்து, தமது த்ருப்தியையும் தெரிவித்து, ஸ்ரீராமனுக்குப் புகழும் பலமும் களிப்பும் ஸுகமும் உண்டாகுமாறு அவரை வாழ்த்திச் சென்றார். *

இப்படி, பாகவத குசேலராகிய ஸுதாமாவுக்கும், ராமாயண குசேலராகிய த்ரிஜடருக்கும் சிற்சில வேற்றுமைகள் இருப்பினும், த்ரிஜடரை ராமாயண குசேலரென்று சொல்வது தவறாகாது. 'செந்தமிழ்ச் செல்வம்'

---

* ஸ்ரீ வால்மீகி பகவான் அயோத்யா காண்டத்தில் கூறியுள்ள இந்த த்ரிஜட வ்ருத்தாந்தத்தைக் கம்பநாட்டாழ்வார் ஸுந்தர காண்டத்தில்,

" பரித்த செல்வ மொழியப் படருநாள்
அருத்தி வேதியற் கான்குல மீந்தவன்
கருத்தி னைசைக் கரையின்மை கண்டிறை
சிரித்த செய்கை நினைந்தழும் செய்கையாள். "

[—ஸுந்தர காண்டம், காட்சிப் படலம்—26]

என்று ரஸமாகக் கூறுகிறார்.

[ஸீதா தேவியைத் தேடும் பொருட்டு ஸுக்ரீவ மஹாராஜரால் அனுப்பப்பட்ட ஹநுமான், லங்கா நகர் முற்றும் ஸீதையைத் தேடியும் அகப்படாமல் மனமுடைந்து சோர்ந்து வருந்தி நிற்க, அப்போது தேடாது மிச்சமாயுள்ள இடம் அசோக வநிகையே யென்று அறிந்து ஹநுமான் அவ்வநத்தைச் சார்ந்தான். அப்போது ஸீதாபிராட்டி, தன்னைக் காவல் காக்கும் அரக்கியரால் நெருக்குண்டு மெலிந்து வருந்திப் பற்பல வகையில் இராமனது கல்யாண குண சரிதங்களையும் அவனது பிரிவாற்றாமையையும் நினைந்து அவற்றைப் ப்ரக்கக் கூறித் தனது மனத்திற்கு ஆறுதல் செய்துகொள்ளுகிறாள். அவைகளுள் ஒன்று இப்பாசுரம்.]

[இதன் பொருள்] இராமபிரான் தாய் தந்தையரின் கட்டளைப்படி தனது அரசாட்சிச் செல்வத்தை நீத்து வனஞ் செல்லுங்கால், தானம் பெறவேணு மென்ற ஆசையுடைய (த்ரிஜடர் என்னும்) ஒரு ப்ராஹ்மணனுக்குப் பசுக் கூட்டங்களைத் தாநம் செய்து, அந்த ப்ராஹ்மணன் மனத்தில் எல்லையில்லாத ஆசையிருப்பதைப் பார்த்து, இறைவனை ராமபிரான் புன்சிரிப்புக் கொண்ட செய்கையை யெண்ணி அழுகின்ற செய்கை உடையவளானாள்.]

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஐககண்ட்யம்

முதல் இரண்டு திருவாய்மொழிகளின் ப்ரஹ்ம ஸூத்ர சாஸ்த்ர விளக்கம்

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L,, அட்வோகேட், திருச்சி.]

ஈட்டில், 'வீடுமின் முற்றவும்' ப்ரவேஶத்திலும், தாத்பர்ய ரத்நாவளியில்

'ஸூத்ர ஶாரீரகார்த்த க்ரம இஹ விஶதம் விம்ஶதி த்வ்யுக்தி காதா:'

என்ற ச்லோகத்திலும் ஸாதித்தபடி, முதல் இரண்டு திருவாய்மொழிகளின் 22- பாசுரங்களால் ஶாரீரக மென்னும் ப்ரஹ்ம ஸூத்ர ஶாஸ்த்ரத்தின் உண்மையான ஸாம்ப்ரதாயிகப் பொருள்களை அந்த ஶாஸ்த்ர க்ரமத்தை அநுஸரித்துத் தெளிவாக ஸூசித்துக் காட்டும் முறைகளை விவரிப்போம். இதற்கென்றே விசார பூர்வகமாக ஸ்ரீ காஞ்சீ வரவரமுனிதாஸ ஸ்வாமி அருளிய உபய வேதாந்த ஐககண்ட்யம் எனும் ப்ரபந்தம் ஒன்று பகவத் விஷய வ்யாக்யாநங்களில் அச்சிடப்பட்டுள்ளது. அந்த க்ரந்தத்தில் ஸாதிக்கப்பட்ட விஷயங்களை இங்கே ஆங்காங்குக் காட்டுவோம். ஒவ்வொரு அதிகரணமும் யதாக்ரமமாக அர்த்த ஸூசநம் செய்யப்படுவது முண்டு; பாதம் பாதமாக விஷயங்களை மொத்தமாகவும் ஸூசிப்பதுண்டு. 'மாற னடிபணிந் துய்ந்த விராமாநுசன்' என்று படித்திருப்பது மிகவுரை யல்ல. போதாயந வ்ருத்தி, ஸ்ரீ பாஷ்யத்திற்கு மூலமா யிருப்பதுபோல், திருவாய்மொழி ப்ரபந்தமும் அதற்கு மூல மென்பதை விளக்குவோம்.

'உயர்வற' வென்னும் முதற் பாசுரத்தில் ஸூசிக்கப்படும் பற்பல வேதாந்த வாக்யங்களையும், அவற்றின் பொருள்களையும், வேதாந்த ரஸாம்ருதங்களையும் ஒரு க்ரந்தத்தில் விஸ்தரித்தோம். இந்த முதல் பாசுரம் நான்கு அடிகளும் க்ரமமாக ஸூத்ர ஶாஸ்த்ரத்திற்கு 'உபோத்காத' மென்னும் 'அவதாரிகை'யான சதுஸ்ஸூத்ரீ என்னும் முதல் நான்கு அடிகளின் விஷயங்களைத் தெளிவிக்கின்றன வென்று ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி க்ரந்தம் காட்டியது. ஸித்தமான (நித்யமான) ஸாத்யச் செய்கை யல்லாத ப்ரஹ்ம மென்னும் வஸ்துவை ஸ்வதந்த்ரமாக வேதாந்த சப்தங்கள் போதிக்க யுக்த மல்ல வென்னும் லோக ஶப்தங்களுக்கும், ஒரு க்ரியையில் அந்வயிக்காமல் க்ரியை யல்லாத ஸித்தப்

பொருளை (வஸ்துவை) உரைக்க ஶக்தியில்லை யென்றும் கூறும் 'குரு' என்னும் ப்ரபாகருடைய பூர்வ மீமாம்ஸா பக்ஷத்தை நிரஸித்து, உலகத்திலும் வேதத்திலும் ஸித்தமான வஸ்துக்களை ஶப்தங்கள் போதிக்க ஶக்தி உண்டென்றும், ப்ரஹ்ம மென்னும் பதம் எல்லாவற்றைக் காட்டிலும் ஸ்வரூபத்தாலும் மங்கள குணங்களாலும் அத்புத ஶக்திகளாலும் ஸ்வதஸ்ஸித்தமான நிரதிஶய மஹிமைகளாலும் ப்ருஹத்தான அநந்த ஜ்ஞாநாநந்தப் பொருளைப் போதிக்கிறதென்று ஸாதிக்கப்படுவதையும், ஒரு க்ரியையோடு ஸம்பந்தப்பட்டதாகத் தான் ஸித்தமான வஸ்துவை ஶப்தங்கள் போதிக்கலா மென்று ஒப்பினும் மீமாம்ஸகர் ஸித்த வஸ்துவான ஸ்வர்க்க மென்னும் அவர்களுக்குப் பரமோத்தேச்யமான ப்ரயோஜநத்தை 'ஸ்வர்க்காமோ யஜேத' முதலிய வாக்யங்களிலும் கார்யாந்வித ரூபமாகப் போதிப்பதாக ஒப்புக்கொள்ளும் க்ரமத்தில் 'நிரதிஶயாநந்தமான ப்ரஹ்மத்தை யடைவதற்கு ப்ரஹ்மத்தை யுபாஸிக்க வேண்டும்' என்று விதிக்கும் வேதாந்த வாக்யங்களில் அடையவேண்டிய பலத்திற்கு ஸாதநமாகக் குறிக்கப்படும் ப்ரஹ்ம மென்னும் வஸ்துவை அறிவிக்க ப்ரஹ்ம ஶப்தம் சக்தியுள்ள தென்றும், ஜிஜ்ஞாஸாதிகரண மென்னும் முதலதிகரணத்தில் ஸாதித்த விஷயங்களை இங்கே ஶாஸ்த்ராரம்பத்தில் முதலடியால் ஸ்பஷ்டமாகப் பஹுவிதமாய்த் தெரிவிக்கிறார். குழந்தைகள் முதல் முதலில் ஶப்தங்களின் பொருள்களை அறியும் வழியை விசாரித்து, அதைக்கொண்டு அந்த க்ரமத்திலேயே எல்லா சப்தங்களுக்கும் வ்யுத்பத்தியைத் தீர்மானிக்க வேண்டு மென்றும், வ்ருத்தரான பெரியோர்களும் குருக்களான தாய் தந்தையர்களும் ப்ரயோகிக்கும் 'பசுவைக் கொண்டு வா,' 'பாத்ரத்தைக் கொண்டுவா' என்பவை போன்ற வாக்யங்களைக் குழந்தைகள் கேட்டு, யாரைக் குறித்து இந்தச் செய்கையை ஏவும் வாக்யங்கள் ப்ரயோகிக்கப்படுகின்றனவோ அவர்கள் அந்தந்தப் பொருள்களைக் கொண்டுவருவதையும் பார்த்துக்கொண்டு, முன் ஏவிய வாக்யங்களிலுள்ள ஶப்தங்களின் பொருள்களைக் குழந்தைகள் கொஞ்சங் கொஞ்சமாக யுக்த்யூஹங்களால் தெரிந்துகொள்ளுகிறார்களென்னும் செய்கைகளைத் தெரிவிக்கும் வாக்யங்களின் ப்ரயோகத்தாலும் அவ்வாக்யங்களை அநுஸரித்துச் செய்யப்படும் செய்கைகளைப் பார்ப்பதிலிருந்தே முதல் முதலில் குழந்தைகளுக்கு வ்யுத்பத்தி ஏற்படுவதாலும், அந்த வாக்யங்களிலுள்ள ஸித்த வஸ்துக்களைக் குறிக்கும் ஶப்தங்களுக்கும் செய்கை வாக்யங்களுக்கும் செய்கைகளுக்கும் ஸம்பந்தப்பட்டதாகவே வ்யுத்பத்தி ஏற்படுவதாலும், ஸித்தமான வஸ்துக்களை ஶப்தங்கள் தனிமையில் போதிக்க முடியாதென்பது ப்ரபாகரர் கக்ஷி. இவர் சொல்லுவதை வேதாந்த தர்ஶநங்களாவது மற்ற தர்ஶநங்களாவது ஒப்பவே யில்லை. ஶங்கர பாஷ்யத்தில் நாலாவது அதிகரணத்தில் இதைக் கண்டித்து 'ஸித்தே வ்யுத்பத்தி'யை ஸ்தாபிப்பதாக ஸமந்வய ஸூத்ரத்திற்கு ஒரு பொருள் கூறப்பட்டது. மத்வ பாஷ்ய வ்யாக்யாநங்களில் 'ப்ரஹ்ம தர்க்க மென்கிற ஸூத்ரத்திற்கும் ப்ராசீநமான ப்ரமாண க்ரந்தத்தில் ப்ரபாகருடைய கக்ஷியை நிரஸித்து ஸித்தப் பொருள்களிலும் வ்யுத்பத்தி உண்டென்று ஸாதித்திருப்பதால்' என்பது ப்ரஹ்ம விசாரத்தைச் செய்யக் கூடாதென்ற ஆக்ஷேபத்தைத் தள்ளுவதற்கு 'ஹேது'வாகக் கூறப்பட்டது.

ஶங்கர பாஷ்யத்தில் இவ்வதிகரணத்தில், ப்ரஹ்ம ஶப்தத்தின் தாதுக்களான 'ப்ருஹ ப்ருஹி வ்ருத்தௌ' என்பதிலிருந்து 'எல்லையில்லாமல் பெரிய தென்கிற' வ்யுத்பத்திப் பொருள் கிடைப்பதால், அந்த வழியில் ப்ரஹ்ம சப்தத்தின் பொருள் ப்ரஸித்தமாகிற தென்று கூறப்பட்டது. ப்ரஹ்ம சப்தத்திற்கே, ப்ரஹ்ம மென்னும் வஸ்துவை ஸ்வதந்த்ரமாகப் போதிப்பதற்குச் சக்தியில்லை யென்று ஒரு வேத மீமாம்ஸா ஶாஸ்த்ரக்காரர் சொல்லும் கக்ஷியைத் தள்ளாமல் சப்த ப்ரஹ்மமாகிய வேதாந்த வாக்யங்களைக்கொண்டு ப்ரஹ்மத்தை விசாரிக்கும் இந்த ஶாஸ்த்ரம் தொடங்கவே முடியாது. 'ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸை செய்யத் தக்கது,' 'செய்யவேண்டியது,' 'அது ஆரம்பிக்கப்படுகிறது' என்று இந்த ஸூத்ர ப்ரதிஜ்ஞையே கூடாமல் போய்விடும். அதனால் இங்கேயே ப்ரபாகரர் கக்ஷி நிரஸிக்கப்படுகிறது. குழந்தைகள் ஶப்தங்களின் பொருள்களை யறிந்து பாஷையை யறியவும் பேசவும் அநாயாஸமாய் எப்படியோ தெரிந்து கொள்வது ஆச்சர்யத்திலும் ஆச்சர்ய மென்கிற சொல்லவேணும்.

"ஸம்ஸாரேऽநாதிகாலே உபஹத நிஹவ தஸ்ஸம்ஹிதாஸ்ஸம்ஸ்க்ருதிஸ்ஸ்யு-
ஸ்ஸம்ஸாரோல்லோயகாஸ்வ ஸ்வயமேவ நிவ தஜ்ஞப்ருகாஸ்தீ: வ்யவஹாரா:"

என்று ஸாராவளி. அநாதி காலமாய்ப் பல ஜந்மங்களில் ஏற்பட்டிருந்த பாஷாஜ்ஞாந ஸம்ஸ்காரங்களில் சில வ்யாஜ மாத்ரங்களால் குழந்தைகளுக்குச் சில உத்புத்த மாகலாம். இத்தகைய பூர்வ ஸம்ஸ்காரானுவ்ருத்திகளைக் கொண்டு பூர்வ ஜந்மங்கள் இருந்திருக்கவேண்டு மென்றும் தீர்மானிப்பர். பூர்வ ஸம்ஸ்காரங்களும் குழந்தைகளுக்கு விரைவில் தானாகச் சொற்பொருளறிவும், சொற்ப்ரயோக ஶக்தியும் ஏற்படும் விஷயத்தில் உபயோகப்படுவதாகச் சொல்லலாம். குழந்தைக ளல்லாத பெரியவர்கள் புதிதாக வேறு பாஷையைக் கற்றுக் கொள்ளுவதில் ப்ரபாகரர் சொல்லும் வழிகளுக்கு இட மெங்கே? சிசுக்கள் ஆவாபம் உத்வாபம் என்னும் யுக்திகளையும் அநுமானங்களையும் பெரிய தார்க்கிகர்களைப்போல் செய்து ஓரோர் சொற்களுக்குப் பொருள்களை நிச்சயித்துக் கொள்வதாயும், அந்த வழியில்தான் எப்பொழுதும் யாருக்கும் சப்த வ்யுத்பத்தி யேற்படவேண்டு மென்றும் சொல்லுவது யுக்தமே யாகாது. இந்த விடத்தில் ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களில் பலவிதங்களில் க்ரியாபர மல்லாத சொற்களுக்கு வ்யுத்பத்தி ஏற்படும் முறைகளைக் காட்டி ப்ரபாகருடைய பூர்வபக்ஷம் தள்ளப்பட்டது. பூனை குதிரை முதலிய ஸித்த வஸ்துக்களை விரலால் காட்டி, 'இதற்கு இன்ன பெயர்?' என்று தாய் தந்தை உபாத்யாயர் முதலியவர்கள் சொல்லி ஶப்த வ்யுத்பத்தி ஏற்படுத்திவைப்பது ஸஹஜம். வஸ்துக்களின் படங்களை எழுதி அவற்றின் பெயர்களையும் பக்கத்தில் எழுதி ஸித்தப் பொருள்களின் வ்யுத்பத்தியைக் கற்றுக்கொடுப்பதும் ஸஹஜம். அகராதிகள் முதலிய சொற்பொருளுரைக்கும் கோஶங்களிலிருந்தும், வ்யாகரணத்திலிருந்தும், வ்யவஹாரங்களைக் கேட்பதிலிருந்தும், பெரியோர் சொல்லிக்கொடுப்பதாலும், எல்லா ஶப்தங்களுக்கும் வ்யுத்பத்தி ஏற்படுவது அநுபவஸித்தம். கண்ணால் காணக் கூடாத பொருள்களைச் சொல்லும் சப்தங்களையும், அப்பொருள்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களையு முரைப்பதால் பொருள் தெளிவிப்பர்.

“ காய-ராய-ரவைவ ஊ திநிவை-ரொா நிநி-ரவாஸநஃ ”

என்று ஸ்ரீ பாஷ்யம். ப்ரஹ்ம மென்பது புலன்களுக்கு விஷய மல்லாதது. அறியப்படாத இப்பொருளை அதீந்த்ரியப் பொருள்களை விளக்கும் மிக்க சுடரான ச்ருதியின் நிர்வசநங்களும், யாஸ்க நிருக்தம் முதலிய வேத சப்த கோசங்களும், ருஷிகளின் நிர்வசந வசநங்களும், வேதாங்கமான ருஷி ப்ரணீத மான வ்யாகரண ஸூத்ரங்களும், தாது பாடங்களும் ப்ரஹ்ம ஶப்தத்தின் பொருளை நன்கு தெளிவிக்கின்றன. “எங்கும் எப்பொருளில் ப்ரயோகித் தாலும் ப்ருஹத்வம் (பெரிதான தன்மை, உயர்ந்த தன்மை) கூடியிருப்பதால் தான் ப்ரஹ்ம ஶப்தம் அதில் ப்ரயோகிக்கப்படும். உயர்த்தி — பெருமை யென்னும் ப்ருஹத்வம், ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் எங்கும் தனக்கு மேற்பட்ட தில்லாமலும், ஒருவித எல்லை யில்லாமலும் கூடியிருக்குமோ, அவ் வஸ்துதான் ப்ரஹ்ம ஶப்தத்திற்கு முக்யமான-நேரான-ஸாக்ஷாத்தான-பொரு ளாகும். அப்படிக்கொத்த ஸ்வரூப குணாதிஶயங்களை யுடையவர் ஸர்வேச்வரர் ஒருவரே. ஆகையால் ப்ரஹ்ம ஶப்தம் அவரிடத்தில்தான் உபசார மன்றியில் முக்யமான கருத்தை யுடையது. வேதம், ப்ரஹ்மதேவன், ப்ராஹ்மண ஜாதி, தபஸ், ஜீவன் முதலிய பொருள்களில் ப்ரஹ்ம சப்தம் ப்ரயோகிக்கப்படுவ தற்குக் காரணம் அந்த ஶப்தத்திற்கு முக்யப் பொருளான ப்ரஹ்மத்தின் பெருமையில் ஓர் துளி இருப்பதே. அதனால் அது உபசார ப்ரயோக மென்பது” என்று ஸ்ரீ பாஷ்யத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ள விஷயம், இப்பாசுரத்தின் முதலடியின் விவரணமே யாகும். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

த்வை மாத்ர சப்த விசாரம்

[ஸ்ரீ. உப. கீழாத்தூர் வித்வான் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, பெருமாள்கோவில்.]

‘ தஸ்யாஹ்ராதா தத த்வைமாத்ரோ லக்ஷ்மணோ நாம வீர்யவாந் ।

ஸுமித்ராநந்தவர்த்தநோ ப்ராதா ஜ்யேஷ்டம் மஹா ஹ ॥ ’

என்னும் ஸ்ரீமத் ராமாயண ச்லோகத்தில், ‘த்வைமாத்ர’ ஶப்த விஷயமாய், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் 4-ம் ஸஞ்சிகையில், ஒரு விமர்ஶம், ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமியால் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில், ‘த்வயோ: மாத்ரோ: அபத்யம்’ என்கிற அர்த்தம் விவக்ஷிதமானல், ‘த்வைமாதுர:’ என்ற ரூபம் தான் ஶாஸ்த்ர ஸம்மதமான தென்றும், ரூபத்தின் ஸித்தியை ஆர்ஷ மெனக் கொள்ளலா மென்று ஸ்ரீ கோவிந்தராஜீய வ்யாக்யாநத்தில் இருப்பதாகவும், சிலர் ‘வைமாத்ர’ என்ற பாடத்தை அவலம்பித்து ‘விமாது: அபத்யம் வைமாத்ரேய:’ என்று ரூபம் ஸித்திப்பதால், ‘விமாது: ஸுத:’ என்கிற அர்த்தத்தை விவக்ஷித்து

'अण्' ப்ரயயத்தால் ரூப ஸித்தியைச் சொல்லுகிறார்க ளென்றும், இந்த இரண்டு விஷயமும் 'वैमात्रः' என்று வ்யாக்யாதாவால் எடுக்கப்படவில்லை யென்றும், 'द्वयोर्मात्रोः अपत्यम्' என்ற அர்த்தம் பொருந்தவில்லை யென்றும், 'द्वितीया माता—द्विमाता, द्विमातुः अयं द्वैमात्रः' என்று விக்ரஹித்தால் பத ஸங்கதியும் அர்த்த ஸங்கதியும் ஸித்திக்கின்றன வென்றும் எழுதப் பட்டிருக்கின்றன. இது விஷயமாய் ஒரு விசாரம் தோன்றுகிறது.

வ்ருத்தி விஷயத்தில் ஸங்க்யா வாசக ஶப்தத்துக்குப் பூரணார்த்தகத் வத்திலோ அர்த்த விஷயத்திலோ இது பொருத்த முள்ளதுதான். ஆனால், இந்த ச்ரமமு மில்லாமல், ஸ்ரீ கோவிந்தராஜ வ்யாக்யானமே ஸங்கத மாகலா மென்று தோன்றுகிறது. நாமலிங்கானுஶாஸநத்தில் லிங்காபட்டர் 'वैमात्रेयो विमातृजः' என்று மிடத்தில், 'द्वैमात्रेयो द्विमातृजः' என்று பாடாந்தரத்தை எடுத்து, 'द्वयोर्मात्रोरपत्यम्' என்கிற அர்த்தத்தை ஸந்தேஹ மறத் தரக்கூடிய 'द्विमातृज' ஶப்தத்தை 'वैमात्रेय' பதத் துக்குப் பர்யாயமாக உதாஹரித்திருக்கிறார். அந்த ஶப்தத்துக்கு, 'இரண்டு தாய்களுக்குப் பிறந்தவன்' என்று அர்த்தமும் அதில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால், 'द्वयोर्मात्रोः अपत्यम्' என்ற அர்த்தம் ஸங்கத மாகலாம். 'द्वैमातुर' 'षाण्मातुर' ஶப்தங்களுக்கும் 'அபத்ய' ஶப்தார்த் தத்தை கௌணமாகத்தான் அவலம்பிக்கவேண்டும். இரண்டு தாய்களுக்கு ஒருவன் பிறக்க முடியாது. இங்கும் அப்படியே 'द्वैमात्र' ஶப்தத்துக்கு அர்த்தம் கொள்வதில் யாதொரு அஸௌகர்யமு மில்லை. 'द्वैमात्र' என்ற ரூப ஸித்திக்காக 'तस्येदम्' என்பதால் 'अण्' ப்ரத்யயம் அவலம்பிக் கலாம். 'द्वितीया माता द्विमाता तस्याः अपत्यम्' என்று அர்த்தம் சொல்லு கிறவர்களுக்கும், 'मातुरुत्संख्या' என்கிற ஸூத்ரத்தால் 'द्वैमातुरः' என்று தான் ரூபம் ஸித்திக்கும். ஆகையால் அவர்களும் 'अण्' ப்ரத்ய யத்தை அவலம்பிக்கத்தான் வேண்டும். 'अण्' ப்ரத்யயமும் அவச்ய மிருந்தால் அபத்ய ரூபார்த்தத்தைச் சொல்லும். அந்த அர்த்தம் அவிவக்ஷித மானால் ரூப ஸித்தியை மாத்ரம் 'अण्' ப்ரயயத்தால் கொண்டால் பாதகம் ஒன்று மில்லை. 'वायसः' என்ற பதம் 'वयसाम् अयम्' என்ற வ்யுத்பத்தியால் ஆகிறது. 'वायसः अत्र तस्येदमित्यण्' என்று ஶாஸ்த்ரத்தில் சொல் லப்பட்டிருக்கிறது. இந்த 'अण्' ப்ரத்யயமே அபத்ய ரூபார்த்தத்தைத் தெளி வாகக் காட்டுகிறது. ஆகையால், க்ரமமான 'द्वैमात्र' பதமே இருக்க லாம். ஶப்த ஸாதுத்வத்திற்காக ஆர்ஷத்வமோ 'अण्' ப்ரத்யயமோ ஆச்ர யிக்கப்படலாம். ஆகையால், அபத்ய ரூபார்த்தமே மேற்சொன்னபடி ஸங்கத மாகையால், அநந்யதா ஸித்தமான 'त्रिविष्वादि' ஶப்தங்களில் ஆதரிக்கப் பட்ட பூரணார்த்தகத்வத்தை இங்கு ஆதரிக்கவேண்டிய் ச்ரமம் வேண்டியதில்லை யென்று தோன்றுகிறது. 'वैमात्रेय' பதம், 'द्वैमात्रेय' பதம், 'विमातृज' பதம், 'द्विमातृज' பதம்—ஆகிய இவைகள் மாற்றாந்தாயின் பிள்ளை யைக் குறிக்கின்றன வென்பதில் ஸந்தேஹ மில்லை. ஶப்த ஸாதுத்வத்துக்காக

அதிக ச்ரமம் வேண்டியதில்லை. அர்த்தம் ஸங்கதமானால் அதை எப்படியாவது ஸாதித்துக்கொள்ளலாம்.

ஆதலால் ஸ்ரீ கோவிந்தராஜீய வ்யாக்யானமே ஶப்த விஷயத்திலும் அர்த்த விஷயத்திலும் ஸங்கதமாகலாம். இந்தப் பக்ஷத்தில் ப்ரஸித்த வ்யாக்யாதாவான ஸ்ரீ கோவிந்தராஜர்பேரில் தோஷோத்காடந மில்லை. ஸாத்யமான வரையில் பூர்வ வ்யாக்யாதாக்களின் வ்யாக்யானத்தை ஸமஞ்ஜஸப்படுத்துவதே வித்வான்களுடைய முறையும் கடமையுமாகும்.

ஸ்ரீ :

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விரோதி ஸூ. ஆனி (மிதுந) மீ. ஜூன்-ஜூலை-49.

14—6—49	1உ	செவ்வாய்க்கிழமை	...	சூந்ய திதி; ஷடசீதி; மிதுந ரவி 31—5. [இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்]
15—6—49	2உ	புதன்கிழமை	...	சூந்ய திதி
16—6—49	3உ	வியாழக்கிழமை	...	மிதுந க்ருஷ்ண ஷஷ்டி திதி
21—6—49	8உ	செவ்வாய்க்கிழமை	...	,, ,, ஏகாதசி திதி
22—6—49	9உ	புதன்கிழமை	...	த்வாதசி திதி; ஸர்வ ஏகாதசி வ்ரதம்
23—6—49	10உ	வியாழக்கிழமை	...	அதிதி
24—6—49	11உ	வெள்ளிக்கிழமை	...	த்ரயோதசி திதி
26—6—49	13உ	ஞாயிற்றுக்கிழமை	...	அமாவாஸ்யை திதி; ஸர்வ அமாவாஸ்யை
27—6—49	14உ	திங்கட்கிழமை	...	ப்ரதமை-த்விதீயை திதி த்வயம்
28—6—49	15உ	செவ்வாய்க்கிழமை	...	த்ருதீயை திதி
5—7—49	22உ	செவ்வாய்க்கிழமை	...	ஸ்ரீ பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்
6—7—49	23உ	புதன்கிழமை	...	ஸர்வ (சயந) ஏகாதசி
8—7—49	25உ	வெள்ளிக்கிழமை	...	த்ரயோதசி திதி
9—7—49	26உ	சனிக்கிழமை	...	சதுர்த்தசி-பூர்ணிமா திதி த்வயம்
10—7—49	27உ	ஞாயிற்றுக்கிழமை	...	ப்ரதமை திதி
11—7—49	28உ	திங்கட்கிழமை	..	த்விதீயை திதி
12—7—49	29உ	செவ்வாய்க்கிழமை	...	த்ருதீயை திதி
13—7—49	30உ	புதன்கிழமை	...	அதிதி
14—7—49	31உ	வியாழக்கிழமை	...	க்ருஷ்ண சதுர்த்தி திதி
15—7—49	32உ	வெள்ளிக்கிழமை	...	க்ருஷ்ண பஞ்சமி திதி

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மதுராலாபம்

[நத்தின் சரித்ரம்]

[ஸ்ரீ. உப. கல்யாணபுரம் S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M.A., வித்வான், L.T.,

திருவையாறு]

189259

தென்பாண்டி நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூர் நகரத்திற்கு இரண்டு க்ரோசங்கள் தெற்கே உள்ள 'பெரும்பாண்டி' என்னும் சிற்றூர்க்கு அடுத்த பரந்த மைதான வெளியில் நம் சிறு சரித்ரம் ஆரம்பிக்கின்றது. இரவு எட்டு ஒன்பது நாழிகை யிருக்கலாம். மாசற்ற வானில் தண்மதி எழுந்து தன் வெள்ளிய நிலவை மலை மண்டிய அக்குறிஞ்சி நிலப் பகுதியில் மிகுதியாய் வர்ஷித்துக்கொண்டிருந்தது. நாற்புறமும் வானோங்கிய மலைகள். கண்ணுக்கெட்டியமட்டும் ஜன நடமாட்டம் இல்லை. சற்று விலகி விலகித் தனித்தனியே வளர்ந்த சிற்சில மரங்கள் தங்கள் இலைகளும் அசையப் பெருது நின்றன. என்ன வானின் நீலப்பரப்பு! என்ன கல்லார்ந்த நிலப் பரப்பு! நிச்சப்தமான அவ்விரவில் ஒரு பெண் தனி நடந்தாள்.

"என்ன மடமை! கல்லூர் வரும் வழியே இருந்ததால் அங்குச் சற்று நேரம் பேசி வீண் பொழுது போக்கிவிட்டே னல்லவா? இன்னும் நான்கு கல்லுகள் நடந்து செல்லவேண்டுமே. துணை யாரையும் காண்கிலேனே! திரும்பிப் பாண்டி செல்வ தென்பதும் முடியாத செயலன்றோ? ஆனல் நிலவு இருக்கிறது. ஒரு முஹூர்த்த நேரத்திற்குள் வில்லிபுத்தூர் சென்றுவிடலாமென்று நினைக்கிறேன்" என்று அவள் சொல்லிக்கொண்டாள். தன் உடல் நிலை எத்தனை உதவி புரியுமோ அத்துணை விரைவுடன் அவள் செல்ல ஆரம்பித்தாள். நிலா வெளிச்சத்தில் அப்பெண்மணி, நல்ல உயர்ந்த ஆக்ருதியும் பரந்து சோர்வுற்ற முகமும் உடையவளாய்க் காணப்பட்டாள். நடையில் தளர்வானது அவளது முதிர்ந்த கருவுற்ற நிலைமையை வெளிப்படுத்தியது. அவள் விரைந்து நடந்தாள். வெகு தூரத்தில் இருண்ட மரச்செறிவின் மீதே ஓர் உயர்ந்த கோபுரம் எழுந்து தோன்றிற்று. பெண் கைகுவித்தாள். 'அன்னையே! ஆண்டாளே! நீயே முகம் காட்டுவதுபோல் நின் கோபுரம் என் முன்னர்த் தோன்றுகிறது. தாயே! யாருங் கதியற்று வில்லிபுத்தூரில் மாமன் மனையை நாடிச் செல்லும் எனக்கு நீயே வழித்துணை யாகவேண்டும்' என்று மெல்லிய குரலில் சொல்லிக்கொண்டாள். பாதிவழி நடந்திருப்பாள். வழியில் யாரும் நடப்பவர் இல்லை. திடீரென்று பெருங்காற்றுக் கிளம்பியது. வானின் பரப்பை ப்ரம்ஹாண்டயான ஒரு கரிய புயற்படலம் வ்யாபித்தது. மரங்கள்

நிலைகுலைந்து இங்கு மங்கும் சாய்ந்தாடின. பெரிய ஓர் அரக்கன் பெருமூச்சு விடுவதுபோல் காற்று 'ஹோ' என்று சப்தித்தது. பெண் மிகவும் அதைர்யமடைந்தாள். நடை சற்று அதிக வேகமாக ஆயிற்று. மண்டுக பர்வதத்தின் குஹைகளில் பெருங்காற்றுப் புகுந்து பேராரவாரம் செய்தது. மலைக் காடுகளில் நித்ரையிலாழ்ந்த அரிமா தன் உடல் குலுக்கிக் கீழ் வானில் அதிர்ந்தொலித்த இடிக்கு மாறாகக் கர்ஜித்தது. சிங்கத்தின் கர்ஜனை கேட்டு நடுநடுங்கிய யானை இருண்ட பள்ளத்தாக்குப் புறத்தில் தன் குட்டியை அணைத்து, உரத்த குரலில் பிளிறத் தொடங்கியது. தீய்ந்து கிளையற்று நின்ற ஓர் ஆலின் பொந்திலிருந்து கீச்சிடும் ஆந்தைகளின் ஒலி எழுந்தது. பெண்ணின் மனம் பதைபதைத்தது. 'இன்று வில்லிபுத்தூர் யான் சென்று சேரப்போகிறேனோ இல்லையோ? அறியேன்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். வானில் ஒரு பேரிடி எழுந்தது. எங்கும் மை போன்ற இருள் பரந்தது. சந்திரன் எங்கோ ஓடி ஒளித்தனன் போலும்! மின்னல் கண்ணைப் பறித்து ஒளி வீசுங்கால், வெகு தூரத்தில் மலையிலிருந்து இழிந்தோடும் அருவிகள், வானில் எழுந்த அம்மின்னலே தொடர்ந்து மலைகளைப்பற்றிப் புவியில் இழிவதுபோல் தோன்றின. பெருமழை பெய்ய ஆரம்பித்தது. பெண்ணும் வேகமாக நடந்தாள். கற்கள்போல் மழைத்துளிகள் அவள் முகத்தில் அடித்தன. பெண் தைர்யமிழந்தாள். 'அன்னையே!' என்று அவள் வாய் துடிதுடித்தது. கொஞ்ச தூரம் சென்றதும் ஓர் இருண்ட மண்டபம் மின்னல் வெளிச்சத்தில் தென்பட்டது. பெண் அதை நோக்கி விரைந்து நடந்தாள். படபட வென்று பல்லாயிரம் பாறைகள் சரிந்து விழுவதுபோன்ற ஒரு சப்தம் கேட்டது. எதிரில் கொஞ்ச தூரத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு தீய்ந்த மரத்தின்மேல் ஒரு பெரும் ஒளி தாக்கியது. மரம் குபீரென்று பற்றி எரிந்தது. பெண் மூர்ச்சையானாள். கண்கள் சுழன்று இருண்டன. தன்னை ஒரு மாது அணைத்திருப்பதுபோலக் கண்டாள். திடுக்கிட்டுச் சற்றுத் தூரத்தில் எரிந்துகொண்டிருந்த மரத்தின் ஒளியில் அவளை நோக்கினாள். கார்போல் இருண்டு சுருண்டு நிழலாடும் கூந்தல். பரந்த நிறைமதி போன்ற முகம். கறுத்து அருளார்ந்து நீண்ட கண்கள். வெகு அழகிய நாஸி. கொவ்வைச் சிறு செவ்வாய். மலர் போன்ற தன் கரங்களால் அம்மாது தன்னை வாரியணைத்து இன்சொல் சொல்வதைக் கண்டாள். அவளுடைய குரலோ, ஒரே காலத்தில் இனிது மீட்டப் பெற்ற பல யாழ்களின் ஒத்த ஒலிபோல் வெகு இனிமை வாய்ப்பெற்றிருந்தது. அழகிய தன் மேனியைச் சிவந்த ஒரு பழம் பட்டாடையால் மூடி அன்பு ததும்புங் குரலில், 'அம்மா! பயப்படாதே. பாவம்! இந்த நிலைமையில் நீ தனியாய் நடக்கலாமா? வில்லிபுத்தூர் போக விரும்பினை போலும்! சற்றுத் தங்குவோம். இயற்கையின் இப்பயங்கர விளையாட்டு நிற்கட்டும்' என்றாள் அம்மாது. அவளது மெய் தீண்டப்பெற்றுப் பேரானந்த முற்ற நம் பெண்மணி, 'அம்மணீ! உன் குரலைக் கேட்டு என் மனம் களிக்கிறது. தாயற்ற என் நிலையையும் மறக்கச் செய்கிறது. என்ன மழை அம்மா! என்ன காற்று அம்மா! அதோ அந்தத் தீய்ந்த மரம் என்ன செழிப்புடன் எரிகிறது!' என்றாள். புதிய மாது பெண்மணியைத் தடவியவண்ணம் 'பெண்ணே!

அண்ட ப்ரம்ஹாண்டங்களைப் படைத்து, அவற்றை அளித்து அழிக்கும் ஸர்வேச்வரனது வியக்கத்தக்க சக்திக ளல்லவா இவை! காற்று அசைவதும், கடல் நிற்பதும், எரி எரிவதும், வான் பொழிவதும், இவ்வையகம் தழைப்பதும், அவ்வாஸுதேவனது க்ருபையினு லல்லவா? பயப்படாதே. நானும் வில்லிபுத்தூரே போகின்றேன். வா. என்னுடன் நட' என்றாள். நம் பெண்மணி அம்மாதரசியின் கையைப் பிடித்து நடந்தாள். அவள் மனம் களிப்புற்றது. காற்றின் வேகம் குறைந்தது. மழை அடங்கிற்று. சிறு தூற்றல் முகத்தில் இடையிடையே ஜில்லென்று சிறு அலர் மொக்குள்களை வாரி இறைப்பதுபோல் துழாவியது. இருவரும் நடந்தனர். நம் பெண்மணி கேட்க ஆரம்பித்தாள். 'அம்மணீ! தங்களைப் பார்த்தால் அரசாளும் மன்னவர் பணியத்தக்க பெருமாட்டியாகத் தோன்றுகிறதே! தங்கள் திருமேனியில் ஓர் ஆபரணமும் காணப்பெற்றிலதே. உருண்டு அழகிய நும் கைகள் வைர வளையல்களை எப்பொழுது நீங்கின? செந்தாமரை போன்ற நும் சேவடி பத்தரை மாற்றுப் பொன்னுலாய நூபுரங்களை ஏன் வெறுத்தன? அம்மா! நீவிர் யாவர்?' என்றாள்.

புதிய மாது.—'பெண்ணே! நான் ஓர் ஏழை. நீ பேசும் அணிகளைப் பெற்று எனக்கு யாது பயன்? இவ்வுலகில் வாழும் பல்லாயிரம் ஏழைகளே எனக்கு அணிகள். அவர்களே என் வாழ்வு. அவர் துயரத்தைப் போக்குவதே என் கடமை. அவரது களிப்புற்ற முகத்தைக் காண்பதே என் பாக்யம். என்னை நீ வில்லிபுத்தூரில் அறியாமல் இருக்கமுடியாது. ஏழையரோடு ஏழையாய் யான் நிலவி வருகிறேன்' என்றாள். நம் பெண்மணிக்கு அவள் பேசுவது முற்றும் விளங்காவிடினும், அவள் வில்லிபுத்தூரைச் சார்ந்தவள் என்றும் தன்னைப்போல் அந்த ஊருக்கு அவளும் போகவேண்டியவள்தான் என்றும் தெரிந்துகொண்டாள். அந்த மாது ஆரம்பித்தாள். "பெண்ணே! காற்றில் கிளர்ந் தெழுந்து படிக்கட்டுகளில் மோதும் அலைகளின் ஓசையைக் கேட்கின்றனையா? அதுவே திருமுக்குளம். அசோ நிலவில் பன்மடங்கு வெள்ளையாக விரிந்து புனல் வெள்ள முற்றுக் கொந்தளிப்பது பெரிய குளம். அந்தியில் மலர்ந்த மல்லிகைகளின் மணத்தை அள்ளி வரும் இத்தண்ணீர்த் திவலைகளின் தட்பம் முக்காலத்தின் வெம்மையையும் போக்கவல்லது. பெண்ணே! இனிப் பயமில்லை; செல்வோம்' என்றாள்.

மேலை ரத வீதியை அணுகும் ஓர் இருண்ட வழியை இருவரும் அணுகினர். நம் பெண்மணி அவளை நோக்கி, 'அம்மணீ! தாங்கள் செய்த உபகாரத்திற்குத் தங்களை என்றும் மறவேன். நான் மிகுந்த ஏழை; ஆயினும் தந வாணிகர் குலத்தி லுதித்தவள்; நற்காலத்தைக் காண்பேன். இன்று உமக்கு என் கையால் ஏதேனும் ஓர் அணி கொடுக்கப்பெறும் பாக்யத்தை எனக்கு அளியுங்கள்' என்று சொன்னாள். புதிய மாது தன் இனிய குரலில் எவ்வளவு மறுத்தும் அவள் கேட்கவில்லை. பிறகு கஷ்டப்பட்டு ஒப்புக்கொண்டாள். நம் பெண்மணியானவள் 'அம்மணீ! எங்கள் குடியில் தொன்றுதொட்டு

வந்த என் மூக்கில் இருக்கும் நத்தைத் தாங்கள் என்ஞான்றும் அணிந்து கொண்டு, தங்கள் அருளுக்கு இன்று இலக்கான இவ்வேழைச் செட்டிப் பெண்ணை மறக்கலாகாது' என்றிறைஞ்சினள். சுருள் சுருளாக அழகிய குழற் கற்றைகள் தன் நெற்றியி லசைய, அப்புதிய மாது, அவ்வேழை அன்பினுல் தந்த காணிக்கையைக் கை நீட்டி வாங்கி அணிந்தாள். திருக்கோயில் வாயில் வந்தது. ஜன நடமாட்ட மில்லை. ஆனை மண்டபத்திலுள்ள ஆனைகள், சங்கிலிகளைப் பாறைச் சுவரில் மோதிப் பிளிறும் ஒலி கேட்டது. களி கொண்ட குதிரைகளின் கனைப்பொலி காதில் வீழ்ந்தது. புதிய மாது 'பெண்ணே!' அதோ வணிகர் வீதி. என்னைப் பார். உன் நன்மை பொருந்திய நத்து எனக்கு எப்படி இருக்கிறது பார்?' என்றாள். நம் பெண்மணி அவ்வழகியின் முகத்தை நோக்கினள். எட்டாம் பிறையின் எழிலுற்ற அவளது மாசற்ற நுதலில் மெல்லிய பூங்காற்றில் அசைந்தாடும் கரிய குழற் கற்றைகளும், அக்குழலில் சூட்டப்பெற்ற நக்ஷத்ரமாலை போன்ற வயிர ஆரமும், காதிலும் கழுத்திலும் கைகளிலும் இடையிலும் சுடர்விடும் நன் மாணிக்க மரகத முத்தின் பூண்களும், அரையிலுடுத்த கலிங்கப் பட்டாடையும், திருவடி யிணையில் ஒளிவீசும் வஜ்ரப் பரல்கள் கொண்ட பொற்சிலம்புகளும், அச்சிலம்புகளுக்கு எல்லையற்ற அழகு தரும் இணையற்ற திருவடிகளையும் நிலா வெளிச்சத்தில் கண்டாள். அத்திவ்யாங்கனையின் மூக்கில் ஏழை தான் அளித்த நத்தினையும் கண்டு வியந்தாள். பெண்மணி ஆச்சர்யங் கொண்டு, 'மாதே! நீ யார்?' எங்கிருந்து இவ்வளவு செல்வத்தை அடைந்தனை?' என்று கேட்டாள். வானிலிருந்து ஒரு பேரொளி கீழே தவழ்ந்து நம் பெண்மணிக்கு எதிரே பரவியது. இவ்வொளியில் புதிய மாது மின்னல்போல் நடந்து ஆலயத்துள் மறைந்தாள்.

செட்டிப் பெண் அளித்த நத்து ஸ்ரீவில்லிபுத்தூரில் திருக்கோயில் கொண்ட அன்னை ஆண்டாளின் திருமேனியில் மிளிர்ந்தது. வழியிலே துணையற்றுப் பரதவித்த பெண்ணுக்கு உதவி அவ்வேழை அளித்த காணிக்கையை உலகறிய அணிந்தாள் உத்தமி. இந்த நத்தின் மற்றொரு பெருமையாவது:— யாதொரு செயற்கைப் பிணைப்புமின்றி அது எம்பிராட்டியின் மூக்கில் அணியுங்கால் இருக்குமாம். திருவாடி உத்ஸவத்தில் ஆறுவது திருவிழாவிலும், மார்கழித் திங்களில் ஆறுவது திருவிழாவிலும், இந்த நத்தை இன்றும் ஸேவிக்கலாம். சில விசேட நாட்களில் அன்னை ஆண்டாளுக்குப் பெருங் கொண்டையும் பரந்த தாடங்கங்களும் சாத்திச் செட்டித் திருக்கோலம் என்று புகழ்கிறார்கள். இத்திருக்கோலம் அன்னையாருக்கு மிகவும் திருவுள்ள முகந்த தென்றும் சொல்லுகிறார்கள். கடலின் பரப்பையோ, வானின் பரப்பையோ, மண்ணின் பரப்பையோ அளவிடக்கூடும். அன்னை ஆண்டாள் உயிர்கள்பால் வைத்த அன்பை அந்த அச்சுதனே அளவிட முடியுமா? அவள் வேறு அன்பு வேறா?

———

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌾𑌦𑌿𑌵𑌣𑍍𑌶𑌠𑌕𑍋𑌪 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

64 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌰𑌦𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑌂 𑌮𑍁𑌦𑌾 𑌤𑌦𑌾 ।
𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑍍𑌯 𑌦𑌯𑌾𑌪𑍂𑌰𑍍𑌣𑌃 𑌸𑍍𑌵𑌶𑌿𑌷𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥

65 𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑍇 𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌕𑍃𑌤𑌾𑌶𑍀𑌰𑍍𑌵𑌾𑌦𑌵𑌨𑍍𑌦𑌨𑌃 ।
𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌕𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌮𑍁𑌦𑌮𑍍 ॥

66 𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑌮𑌾𑌪𑌤𑍇𑌃 ।
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌿 𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑌂 𑌤𑌦𑌾 𑌤𑍁𑌷𑍍𑌟𑍁𑌵𑍁𑌃 ॥

67 𑌶𑍁𑌕𑌾𑌦𑌯𑌸𑍍𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌤𑌪𑌸𑍋 𑌗𑍁𑌰𑍋𑌃 ।
𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌨𑌮𑍍𑌰𑍋 𑌹𑌸𑍍𑌤𑌯𑍁𑌗𑍍𑌮𑌸𑌮𑍍𑌪𑍁𑌟𑌂 𑌸𑌂𑌮𑌤𑌾𑌂 𑌯𑌯𑍌 ॥

68 𑌪𑌾𑌦𑌂 𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌣𑌮𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌜𑌨𑌾𑌨𑌾𑌂
𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑍇 𑌵𑌿𑌨𑌯𑌮𑌸𑍃𑌣 𑌸𑌂𑌯𑌨𑍍𑌤𑍋 𑌵𑌿𑌦𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌨𑍇𑌕𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌮𑌵𑌿𑌭𑌵𑍈𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌦𑌤𑍍𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌰𑍋𑌨𑌾
𑌮𑌨𑍍𑌯𑍇𑌤𑍍𑌵𑌾 𑌗𑍁𑌂 𑌪𑌕𑍍𑌷𑌸𑌮𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌧𑍋𑌦𑌯𑌾𑌨𑌾𑌂 𑌦𑌯𑌸𑍍𑌯 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑍇 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌾𑌦𑌯 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌨𑌾𑌮 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

1 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑌤𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌯𑍋𑌗𑍀 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌵𑌾𑌸𑌰𑍇 𑌤𑌤𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑌖𑌿𑌲𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌧𑌾𑌨𑌤𑌃 ॥

2 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇 𑌤𑌨𑌯𑌾𑌦𑍍𑌯𑍁𑌦𑌿𑌕𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌭𑌾𑌷𑌤𑍇 ।
𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑍋 𑌗𑍀𑌤𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍂𑌃 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑍍𑌰 𑌹𑌿 ॥

3 𑌶𑍍𑌰𑍋𑌤𑍋𑌹𑌨𑍍𑌤𑍍𑌯 𑌪𑌰𑍋 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌤𑌾𑌨𑌪𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌦𑍋𑌷𑍋𑌽𑌪𑌿 𑌵𑌾 ।
𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑍋 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑌾𑌦𑌾𑌪𑍍𑌤𑌦𑍀𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌚 ॥

4 𑌪𑌿𑌯𑌦𑍃𑌂𑌶𑍈𑌤𑌿 𑌵𑌿𑌪𑍍𑌯𑌾𑌤𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌪𑌣𑍍𑌯𑌾 𑌤𑌰𑌙𑍍𑌗𑌿𑌣𑍀 ।
𑌨𑌾𑌶𑌯𑌨𑍍𑌤𑍀 𑌪𑌾𑌪𑌰𑌾𑌶𑍀𑌨𑍍 𑌮𑌜𑍍𑌜𑌤𑌾𑌮𑌾𑌶𑍁 𑌰𑌾𑌜𑌤𑍇 ॥

5 𑌸𑌾𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍀𑌣𑌿 𑌨𑌾𑌨𑌾 𑌸𑍇𑌵𑌾 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌾 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 ।
𑌯𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌜𑌗𑌤𑌾𑌂 𑌨𑍄𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌿𑌨𑍀 ॥

6 𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑌿 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌯𑌤𑍍𑌰 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌿 𑌚 ।
𑌸𑍍𑌨𑌾𑌨𑌾𑌨𑍍 𑌨𑌨𑍍𑌦𑌯𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 𑌮𑍋𑌕𑍍𑌷𑌦𑌾𑌨𑌿 𑌸𑌦𑌾 𑌬𑍁𑌧𑌃 ॥

7 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌨𑌗𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌵𑌾𑌸𑌭𑌕𑍍𑌤𑌶𑍇𑌖𑌰𑌃 ।
𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑍇 𑌹𑌸𑍍𑌤𑌭𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌮𑌹𑍋𑌤𑍍𑌸𑌵𑌃 ॥

8 𑌸𑌾𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍀𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌤𑍁 𑌦𑍇𑌵𑌤𑍇 ।
𑌰𑌾𑌜𑌗𑍁𑌰𑍁𑌶𑌿𑌷𑍍𑌯𑌾 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍍𑌯𑌾 𑌕𑍃𑌤𑌾𑌹𑍍𑌨𑌿𑌕𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌭𑌕𑍍𑌤𑌯𑌃 ॥

9 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌾𑌗𑌮𑌵𑍍𑌯𑍂𑌹𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌾𑌰𑌂 𑌤𑌥𑌾𑌗𑌤𑌮𑍍 ।
𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑌃 ॥

10 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑌾𑌦𑌵𑌨𑍍𑌦𑌨𑍈𑌃 ।
𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑍀𑌶𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌨𑌾𑌮𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 ॥

11 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍 𑌭𑌕𑍍𑌤𑌿𑌜𑌾𑌤𑍍 𑌤𑍀𑌰𑍍𑌥𑌵𑌿𑌹𑌾𑌰𑌾𑌤𑍍 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌦𑌦𑍌 𑌵𑌰𑌮𑍍 ।

12 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌧𑌿𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌮𑍍𑌭𑍋𑌧𑌿𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌿𑌨𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌯 𑌵𑌰𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀𑌧𑌰𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

13 𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌿𑌨𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌃 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋 𑌹𑍍𑌯𑍇𑌵 𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌵 𑌭𑌕𑍍𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌃 ॥

14 “ 𑌭𑌵𑌤𑍍𑌸𑌂𑌸𑌕𑍍𑌤𑌮𑌨𑌸𑍋 𑌦𑍇𑌵𑌾𑌶𑍍𑌚 𑌮𑍁𑌨𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ।
𑌤𑍃𑌣𑌕𑍀𑌟𑌾𑌦𑌿𑌜𑌨𑍍𑌮𑌾𑌪𑌿 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇 𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑍌 ॥

15 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌚𑌰𑌣𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌯𑍁𑌗𑍍𑌮𑍈𑌕𑌾𑌶𑍍𑌰𑌯𑌵𑍈𑌭𑌵𑌃 ।
𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ॥

16 𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌭𑌵𑍇𑌤𑍍 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑌾𑌂 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑍋 𑌯𑌃 𑌸 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌶𑌿𑌕𑌾𑌰𑌵𑌾𑌨𑍍 ॥

17 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑌿𑌰𑍍 𑌨 𑌹𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑌥𑌾 𑌜𑌨𑌃 ।
𑌶𑌰𑌣𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇𑌤 𑌤𑍍𑌵𑌦𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌹𑍋𑌦𑌯𑌾 ॥

18 𑌕𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍍𑌭𑌰𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑌵𑌃 ।
𑌶𑌰𑌣𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌶𑌰𑌣𑍍𑌯𑌂 𑌜𑌗𑌤𑌾𑌂 𑌵𑌿𑌭𑍋 ॥

19 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍈𑌕𑌪𑌰𑌾𑌯𑌣𑌾𑌨𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌸𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌰𑍍𑌤𑌿𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌾𑌨𑍍 ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ வைசாகோத்ஸவமும் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரமும்

பெருமாள்கோவில் என்று வழங்கப்படும் ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீ தேவாதிராஜன் இவ்வர்ஷம் மிகுந்த வைபவத்துடன் வார்ஷிக மஹோத்ஸவம் கண்டருளினன். ஸகாலத்தில் வர்ஷ மில்லாமையாலும், ஆஹாராதி ஸௌகர்யங்களில் மிகுந்த ச்ரமம் ஏற்பட்டு விட்டபடியாலும், ஹரிஜநங்கள் என்றும் வ்யவஹரிக்கப்படும் பஞ்சம ப்ரவேசம் என்னும் ஒரு அநுபத்தியைக் கொண்டும், ப்ராஹ்மண்யங்கள் மாத்ரம் கொஞ்சம் குறைவுதான். எனினும், நடந்த இரண்டு மூன்று வர்ஷங்களைக் காட்டிலும் இவ்வர்ஷம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தி அதிக மிருந்த தென்றே சொல்லவேண்டும் மஹோத்ஸவத்தின் வைபவம் சொல்லத் தரமன்று.

> ‘ தாரா ரவி ஹரணா ஜலஸ்த்ருத் நாதோ ஸ்திகாஷி ஷு
> ஸ்யிகஸ்யிகஸ் நத்ரா ஸாஸ் ஸௌஹாத்யா நம் ’ என்றும்,

> ‘ அத்திகிரி யருளாளப் பெருமாள் வந்தார்
> ஆனைபரி தேரின்மே லழகர் வந்தார் ’

என்றும் ஸ்ரீ தேசிகனால் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட ரீதியில் ஸாயம் ப்ராத: கருட துரகாதி வாஹநங்களில் காருண்யராசியான ஸ்ரீ ஹஸ்திசைலேச்வரன் எழுந்தருளி உத்ஸவம் கண்டருளின வைகரி வாசாமகோசரம். முக்யமாக: ஆரும் உத்ஸவத்தில் காலையில் ஸ்ரீ பேரருளாளன் கண்டருளின ஸ்ரீ வேணுகோபாலன் திருக்கோலம் ஒரு தனி அழகு வாய்ந்தது. இருகைகளில் எழிலாராழி வெண்சங்கு. மற்றிரு கைகளில் திருக்குழல். கருங்கண் மயில் தோகை பிலியணிந்து கட்டி நன்குடுத்த பீதகவாடை. ‘தேனனைய நாதமெழு வதுசிறு வேயினிடை சேர்தொளைகள் மூடிவிடு செயலைப் புரிகின்றன’ அவன் தன் சிறுவிரல்கள். அவனது குழலின் இன்னிசையில் ஈடுபட்டுக் கறவையின் கணங்கள் அவன் தன் கால்கட்டிக் கவிழ்ந் திறங்கிச் செவி யாட்டகில்லாமல் அவன் தன் காநாம்ருதத்தைச் செவிமடுக்கின்றன. விபவாவதாரத்தில் சதுர்ப்புஜத்தோடு குழலூதல் உண்டா? ‘ஸ்யாராஹித..........ஸஞ்சிதவ்யாயணெ’ என்னும் ச்லோகம், இந்தத் திருக்கோலத்தைத் திருவுள்ளத்திற்கொண்டே அவதரித்திருக்கவேண்டு மென்று சில பெரியோர் பணித்துக் கேட்டதுண்டு. பேரருளாளன் கண்டருளும் ப்ரஹ்மோத்ஸவத்தை ஸேவித்து அநுபவித்த ஸ்ரீ தேசிகனுக்கு, ஸ்ரீ வைகுண்டத்தில் தமக்கு அபிலாஷையில்லை யென்று தாம் ஸாதித்தருளினது அதிசயோக்தி யாகுமா? எல்லாத் திருக்கோலங்களும் நவம் நவமாகக் காணப்பட்டுக் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.

இப்படி, பெருமாள் மிகுந்த வைபவத்துடன் கண்டருளும் இம்மஹோத்வத்தில் ப்ரதி ஸம்வத்ஸரமும் பெருமாள்கோவில் ஸ்ரீ அஹோபில மடத்தில், ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், பெருமாளின் ஐந்தாம் உத்ஸவ திநத்தன்று திருக்கேட்டைத் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் சிறப்புடன் கண்டருளுவ துண்டு. அந்த ரீதியில் இவ்வர்ஷமும் வைகாசி மீ°. 1 வ (14—5—49) ஸ்ரீ மஹாதேசிகன் மஹோத்ஸவம் கண்டருளினார். காலையில் மடத்தில் ஸ்ரீ ஸ்வாமி திருமஞ்ஜநம் கண்டருளி, டோலையில் ஸேவை ஸாதித்தார். ஸாயம் சுமார் 4½-மணிக்கு, ஸ்ரீ தேவாதிராஜனுடைய சத்ர சாமராதி வாத்ய கோஷங்க

னுடன் ஸந்நிதித் தெருவில் பெருமாள் கோபுரத்வாரம்வரை திருவீதி உத்ஸவம் கண்டருளி னார். புறப்பாட்டில், அத்யாபக வேதபாராயண கோஷ்டிகளில் அநேக ப்ரஹ்மண்யங்கள் கைங்கர்யங்களில் அந்வயித்தார்கள். ஸாயம் பெருமாள் புறப்பாட்டுக்கு முன்னர் மடத் தில் ஸேவை சாத்துமறை விநியோகாதிகள் நடக்கப்பெற்று, 6-மணிக்கு மஹோத்ஸவம் இனிது நடந்தேறியது. இந்த உபயத்தை, ரிடயர்ட் ஸப்-ரிஜிஸ்ட்ரார் விளாங்காடு ஸ்ரீ. உப. ஸேஷாத்ரி ஐயங்கார் ஸ்வாமி ஏற்று, அதை வெகு ச்ரத்தா பக்தியுடன் நடத்திவைத் தார்.

மாடபூஷி. ஸ்ரீநிவாஸாசார்யர்

[8, வடவண்டை மாடவீதி, பெருமாள்கோவில்.]

*   *   *   *

ஸ்ரீ பகவத் ராமாநுஜனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ராமநாதபுரம் ஜில்லா தேவக்கோட்டை நகரத்தின் அக்ரஹார வாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவர்களினால் நாளது விரோதிஹூ சித்திரைமீ 21உ திருவாதிரை திருநக்ஷத்ரத் தில், ஸ்ரீ பகவத் ராமாநுஜாசார்யனுடைய அவதார மஹோத்ஸவம், இரண்டு திநங்கள் முந்தியே, வக்கீல் ஸ்ரீமான் கே ஸ்ரீநிவாஸையங்காருடைய திருமாளிகையில் ஆரம்பிக்கப் பட்டு மிகவும் விமர்சையுடன் நடத்தப்பட்டது. ஷை நகர வாஸிகளான ஸ்ரீ வைஷ்ண வர்கள் எல்லோரும் அங்கு எழுந்தருளியிருந்தார்கள். அங்கு ஸமீபத்திலிருக்கும் ஸ்ரீ.உப. வித்வான் திருமலாசார்யர் முதலான அநேகம் வைதிக ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வாமிகளினால், அக்காலத்தில் வேதபாராயணம், திவ்ய ப்ரபந்தம், ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீ பாகவதம், ஸ்ரீ பகவத் கீதை, ஸ்ரீ பாஷ்யம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், இவைகள் ச்ரத்தையுடன் காலை மாலை இரண்டு வேளைகளிலும் பாராயணம் பண்ணப்பட்டன. மூன்றாவது திந மாகிய ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருநக்ஷத்ர திநத்தில் ஷை ஸ்ரீ ஸூக்திகளுடைய சாத்து மறையும், ஸம்பாவனைகளும், யதோசிதங்களான கோஷ்டி விநியோகங்களும், பாராய ணம் செய்தருளிய ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனையும் நடத்தப்பட்டன. ஷை மூன்று திநங்களிலும் இரவில் 8-மணி முதல், ஏற்கெனவே ஷை கே. ஸ்ரீநிவாஸையங்காரால் ஸ்ரீரங்கம் போய் எழுந்தருளப்பண்ணப்பட்ட ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான் தேசிக தர்சந ஜயத்வஜர் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியினால் உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. முதல் நாள், “மனிதனைப் பிறந்தவனுக்கு ஆஸ்திக்யம் (அதாவது: சாஸ்த்ரங்களினால் சொல்லப்பட்ட விஷயங்களில் நம்பிக்கை) அவச்யம் வேண்டியது” என்கிற விஷயம், ‘வரீக்ஷ்யலோகாந் கர்மசிதாந்’ என்கிற உபநிஷத்தின் மூலமாக மிகவும் விஸ்தாரமாக உபந்யஸிக்கப்பட்டது. பிறகு மற்றை இரண்டு திநங்களிலும், “ஸ்ரீ பகவத் ராமாநுஜனுடைய காருண்ய குணம், மற்றும் எல் லோருடைய காருண்யத்தைக் காட்டிலும் மிகவும் பெரியது” என்கிற விஷயம், ‘காரேய் கருணை யிராமானுசா இக்கடலிடத்தில் யாரே யறிபவர் நின்னருளின் தன்மை’ என்கிற பாசுரத்தின் மூலமாக மிகவும் விஸ்தாரமாகவும், மிகவும் அழகாகவும், யாவரும் அறியும்படி தெளிவாகவும், ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராண வசநங்களுடன் அதிக காலம் உபந்யஸிக்கப்பட்டது. அங்கு வந்திருந்த அநேகம் வக்கீல்கள் உத்யோகஸ்தர்கள் வைதிகர்கள் ஸ்த்ரீகள் யாவரும் அவ்வுபந்யாஸங்களைக் கேட்டு ஆச்சர்யப்பட்டு ஸந் தோஷித்தார்கள். இப்படி இம்மஹோத்ஸவம் மிகவும் அழகியதாய் நடந்தேறியதற்கு, அவ்வக்ரஹாரவாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ச்ரத்தையும், அதிலும் வக்கீல் ஸ்ரீ. கே. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியினுடைய அளவிறந்த ஆசார்ய பக்தியும் தான் முக்ய காரணம்.

S. வேங்கடநாதையங்கார்,

[தேவக்கோட்டை.]

ஸ்ரீ க்ருஷ்ண ஸபா, மாதுங்கா—பம்பாய்.

ஷை ஸபையின் மூன்ருவது ஆண்டு பொதுக்கூட்டம், மாதுங்கா, 10-நெ. பிராமண வாடா வீதியில் ஸ்ரீ. A. S. ஐயங்கார் ஸ்வாமி தலைமையின்கீழ் 24—4—49-ல் நடைபெற்றது. காரியக் கமிட்டிக்கு, சென்னை ரிடயர்டு ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. V. V ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியும், கட்டிட நிதிக் கமிட்டிக்கு ஸ்ரீ. ஸர். S. வரதாசார்ய ஸ்வாமியும் அக்ராஸநாதிபதிகளாக ஏகமனதாய் இவ்வர்ஷமும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஸ்ரீ. A.S. ஐயங்கார் ஸ்வாமியும், ஸ்ரீ.R. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியும் உப அக்ராஸநாதிபதிகளாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நம் தேச முழுவதும் விசிஷ்டாத்வைத ப்ரசாரம் செய்யவேண்டிய ஏற்பாட்டையும், 'ஸ்ரீக்ருஷ்ண' என்னும் மாதாந்தரப் பத்ரிகை பம்பாயினின்றும் கூடிய சீக்கிரம் வெளிப்படுத்தும்படிக்கும் தீர்மாநம் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயஸ்தர்களும் அபிமாநிகளும் ஷை பத்ரிகையை ஆதரிப்பார்களென்று நம்புகிருேம்.

* * * *

ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 24-4-49 முதல் 3-5-49 வரையில் மேற்படி ஸபையின் சார்பில் ப்ரத்யேகமாய் அமைக்கப்பட்ட பந்தலில் பத்து தினங்கள் காலாநுகுணமாய் வேதபாராயண நாலாயிர திவ்யப்ரபந்த தேசிக ப்ரபந்த ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணங்களுடன் வெகு விமர்சையாய்க் கொண்டாடப்பட்டது. மாதுங்காவிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் ஆர்வத்தோடு கலந்துகொண்டதும், திருக்குடந்தை ஸ்ரீ. தி. அ. ப. நா. ஸ்ரீநிவாஸராகவ பாட்ராசார்ய ஸ்வாமி மிகுந்த உத்ஸாஹத்துடன் இரண்டு வேளைகளிலும் திருவாராதந கைங்கர்யத்திலும் திவ்யப்ரபந்த ஸேவையிலும் ஈடுபட்டதும், சாத்துமறையன்று ஸ்ரீ ஸர். S. வரதாசார்ய ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யகாரர் ஸித்தாந்த உயர்வைப் பற்றி உபந்யஸித்ததும், இவ்வர்ஷம் இந்த மஹோத்ஸவம் விசேஷ வைபவங்களுடன் சிறப்பாக நடைபெற்றதற்குக் காரணமாகும்.

* * * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி 11-5-49 புதன்கிழமையன்று, பகவதாராதந ஸேவை சாத்துமறைகளுடன் நன்கு நடந்தது. யாவரும் எதிர்பாராத நிலைமையில் ஸ்ரீ. உ. வே. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி அன்றைதினம் யாத்ருச்சிகமாய் எழுந்தருளி ஷை உத்ஸவத்தில் கலந்து கொண்டதுமன்றி, ப்ரஹ்லாதாழ்வான் சரித்ரத்தைப் பற்றியும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய அவதார விசேஷத்தைப்பற்றியும் நன்கு உபந்யஸித்தருளினர்.

V. ஸ்ரீநிவாஸன், G. சார்ங்கபாணி,

[காரியதரிசிகள்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

அநேக தேவாலயங்களில் உத்ஸவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. ஸமீபத்தில் ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீ வரதராஜன் ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளினார். ஸேவார்த்திகளின் ஸங்க்யை முன்காலத் தேவாலயங்களும் தைப்போல அபரிமிதமாகவே இருந்ததாம். ப்ராஹ்ம வைதிகர்களும் ணர்களும் ஏராளமாகப் பகவத் ஸேவையை உத்தேசித்தே வந்திருந்ததாக அறிகிறோம். இரண்டு மூன்று வர்ஷங்களாக ப்ரபந்த கோஷ்டியிலும் வேதபாராயண கோஷ்டியிலும் ஸ்வல்ப திருநாமங்களே ஸேவை ஸாதித்ததாக அறிந்தோம். இவ்வர்ஷத்தில் ஒவ்வொரு கோஷ்டியிலும் சற்றேறக்குறைய ஐம்பது திருநாமங்கள் வரை ஸேவை ஸாதித்தார்களாம். ஶாஸ்த்ர விதிகளுக்குப் பயந்து வெளியில் விலகி யிருப்பவர்களுடைய நியமநத்திற்கு வசப்பட்டிருக்கவேண்டியவர்களிலும், அநேகர் ஆத்மாநா அந்த: ப்ரவேசித்துத் திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவித்து வருகிறார்களாம். அப்படிச் செய்வதை அவர்களுடைய நியந்தாக்கள் அநுமோதிப்பதாகத் தெரியவில்லை. இவை யெல்லாவற்றையும் பார்க்கும்பொழுது இது விஷயத்தில் ஒருவித ஔதாஸீந்யம் ஸர்வத்ர வ்யாபித்திருக்கிறதோ என்று சில ஆஸ்திகர்கள் பயப்படுகிறார்கள். ஶாஸ்த்ரத்திற்குப் பயந்து விலகி நிற்பவர்களிடம் அப்படிப்பட்ட அதிஶங்கை செய்யக் காரணமில்லை யென்பது நமக்கு ப்ரத்யக்ஷமாகத் தெரியும். எம்பெருமான் உத்ஸவம் கண்டருளும் போது தமக்கு அவ்விடம் போய் ஸேவிக்கக் கூடாம லிருப்பதை நினைத்து அவர்கள் ஶோசிப்பதும் நமக்கு ஸாக்ஷாத்தாகத் தெரியும். ஆனால் அவர்களுக்குத் தம்முடைய அபிப்ராயப்படி நடவாதவர்கள் விஷயத்தில் ஶாஸ்த்ராதிகாரிகள் ஒரு விதமான நிக்ரஹத்தைச் செய்து வருவதாகத் தெரியவில்லை.

நிக்ரஹத்தைச் செய்ய அதிகார முள்ளவர்கள் பாராங்முக்யத்தைப் பாராட்டினால், அது ஸாமாந்ய ஜநங்களுக்கு ஓர் அதிசங்கையை ஜநிப்பிக்கு மன்றோ?

* * * *

ஜந்மாந்தர ஸுக்ருதங்களின் பலம்

பகவத் க்ருபை இன்னாருக்குத்தான் இப்பொழுதுதான் ஸம்பவிக்கு மென்பது நமக்குத் தெரியாது. கர்மத்தின் பலமாக நாம் நம்முடைய பூர்வ ஜந்ம சேஷ்டிதங்களை அறியக்கூடாமல் இருக்கிறோம். நமக்கு ஸம்பவிக்கும் ஸம்பவங்களுள் பல பூர்வ ஜந்ம சேஷ்டிதங்களின் பல மாகிறபடியால், அந்த ஸம்பவங்களின் காரணம் இன்னதென்று நாம் அறிகிறோ மில்லை. ஆகையால் அவை நமது விஸ்மயத்துக்கு ஹேதுவாகின்றன. அதற்கு நிதர்சநமாக ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் இப்பொழுது ஒரு வ்ருத்தாந்தம் நடந்ததாகத் தெரிகிறது. ஸ்வல்ப திநங்களுக்கு முன் யத்ருச்சையாக ஒரு லௌகிக தநிகர் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதிக்குக் கேவலம் குதூஹலத்தால் தூண்டப்பட்டவராய் அங்குப் போய்ச் சேர்ந்தார். அவருக்கு ஸ்ரீ அழகிய சிங்கரிடம் ஸம்பாஷணம் நேர்ந்தது; பெருமாள் ஸேவையும் வடித்தது. அப்பொழுது, தமது பெரியோர்கள் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவடிகளை ஆச்ரயித்தவர்க ளென்பது அவருடைய ஜ்ஞாபகத்துக்கு வந்தது. உடனே மநஸ்ஸில் ஒரு பரிபாகம் உண்டாகி, தாமும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய க்ருபைக்குப் பாத்ரமாகவேண்டு மென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகிய சிங்கரும் அப்படியே க்ருபை செய்தாராம். இவ்வாறு ஸம்ஸ்காரத்தைப் பெற்ற அந்தப் பாக்யசாலிக்கு ப்ரபதநம் செய்துகொள்ளவேண்டு மென்னும் ஓர் இச்சை ஜநித்திருக்கிறதாம். இந்த வ்யக்திக்குச் சற்றேறக் குறைய ஐம்பது வயஸ் இருக்குமாம். இவ்வளவு காலம் 'ஆத்மா வென்று ஒன்று உண்டு' என்னும் ஜ்ஞாநமே இராமலிருந்த இவருக்கு ஒரு க்ஷணத்தில் ஆத்மஜ்ஞாநம் ஜநித்து இவ்விதம் ஆமுஷ்மிக பரராக ஆனார் என்பது ஓர் ஆச்சர்யமே. 'விதி வாய்க்கின்று காப்பாரார்?' என்றன்றோ ஸ்ரீ பராங்குசன் பணிப்பு. தாம் ஸம்ஸ்காரம் பெற்ற திநத்தில், அவர் தமது கையிலிருந்த யாவத் த்ரவ்யத்தையும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் ஸமர்ப்பித்ததாகவும், இன்னும் மேற்கொண்டு த்ரவ்யம் ஸமர்ப்பிப்பதாகவும் சொல்லிப் போயிருக்கிறாராம். இந்தப் பரிணமம் க்ஷத்ரபந்துவுக்குப்போல ஸதாசார்ய ப்ராப்தியின் பலமாக இருக்கலாம். ஆனால் இவ்வளவு காலமாகக் கிடைக்காமலிருந்த அந்த ஆசார்ய ப்ராப்தி இப்பொழுது கிடைத்ததற்குக் காரணம் என்ன வென்பதை விசாரித்துப் பார்த்தால், அது ஒரு ஜந்மாந்தர ஸுக்ருதத்தில் போயே நிற்கும்.

“ [illegible]
[illegible] ॥ ”

[குறிப்பு:—இந்த விஷயம் நமக்குக் கர்ணாகர்ணிகமாக எட்டிற்று. ஆகையால் இதன் உண்மையைப் பற்றி நாம் நிஷ்க்ருஷ்டமாக ஒன்றும் சொல்ல முடியாது.]

* * * *

'பக்தன்'

திருவல்லிக்கேணி சுங்குவார் வீதியிலிருந்து, ஸ்ரீ. உப. M. K. ரங்காசார்ய ஸ்வாமி என்னும் ஒரு பக்தர் "பக்தன்" என்னும் பெயருள்ள தமிழ்ப் பத்ரிகை ஒன்றை நமக்கு அனுப்பியிருக்கிறார். அதை விமர்ஸிக்கவேண்டு மென்பது அவருடைய திருவுள்ளம். இப் பத்ரிகைக்குக் கௌரவ ஆசிரியர் ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ. உப. கார்ப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி. அதன் நிர்வாஹ ஆசிரியர் ஸ்ரீ. உப. ம. ர. ஸம்பத்குமாராசார்யர், M. A. இந்தப் பத்ரிகை வர்ஷம் ஒன்றுக்கு நான்கு முறை வெளிவருமாம். இதன் வர்ஷச் சந்தா ரூ. ஒன்று.

'பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்' 'கலியும் கெடும்' என்பவை ஆழ்வார் அருளிச்செயல்கள். அவற்றின்படி பக்தி வளர்ந்தால் வல்லுயிர்ச் சாபம் போய்க் கலியும் கெடும். இந்தப் பக்தியை வளர்க்கும் கைங்கர்யத்தில் தொண்டாற்றுவதே இப்பத்ரிகையின் நோக்கமானால், நாம் அதற்கு நம்முடைய ஹார்த்தமான அன்பையும் ஆதரவையும் காட்டுகிறோம்.

திருவல்லிக்கேணியில் ஸ்ரீ யோகி பார்த்தஸாரதி ஐயங்கார் என்னும் ஒரு மஹான், பேயாழ்வார் வீதியில் 'ஸரஸ்வதீ பண்டாரம்' என்னும் ஒரு அக்ரஹாரத்தை, ஒரு தர்மத்தை உத்தேஸித்து ப்ரதிஷ்டை செய்திருப்பது ஸுப்ரஸித்தம். அவ்விடத்தில் ஸ்ரீ நம்பிள்ளை ஸங்கம் என்று ஒன்றும், அதன் ஆதரவில் ஒரு ப்ரபந்த பாடஸாலையும், சென்ற ஒரு வர்ஷ காலமாக நடந்து வருகின்றன. அந்த ஸங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ ஸம்பத்குமாராசார்யர் இப்பத்ரிகையை நடத்த ஆரம்பித்திருப்பதாக நாம் அறிகிறோம். இந்தப் பத்ரிகையின் முதல் ஸஞ்சிகை நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்த ஸஞ்சிகையில் வெளிவந்துள்ள வ்யாஸங்களை எழுதியிருப்பவர்கள் எல்லோரும் தேர்ந்த வித்வான்களாக இருக்கிறார்கள். வ்யாஸங்களை அமைப்பதிலும் அவர்கள் நைபுண்யம் பெற்றவர்களாகவே காணப்படுகிறார்கள். விஷயங்களும் கால தேஸங்களுக்கு உபபந்நங்களாகவே இருக்கின்றன. ஆகையால் இது மஹாஜனங்களுக்கு உபகாரகமாக இருக்கு மென்பதைப்பற்றி ஆக்ஷேப மில்லை.

* * * *

ஸ்ரீ பாஷ்யகாரர்

ஸ்ரீ தேஸிகன் தமது குருபரம்பரா ஸாரத்தில் நமது பூர்வாசார்ய பரம்பரையை ஸ்ரீமந்நாதமுனிகள் முதலாக அருளிச்செய்திருக்கிறார். 'ஸூஆயஞா ஊஸுவஸௌ' என்று அந்த ஆசார்யர்களை அநுஸந்திக்குங்காலத்தில் அவர்களுடைய திருநாமங்களை உச்சரிப்பதுடன், அவர்கள் செய்திருக்கும் உபகாராதிஸயம் முதலானவைகளையும் அநுஸந்திப்பது ஏற்றமுள்ளதென்று திருவுள்ளம்பற்றி, ஸ்ரீ தேஸிகன் இவர்களைத் தனியே விஸேஷித்து அநுக்ரஹித்திருப்பதோடு, அவரவர்கள் அநுக்ரஹித்துள்ள ப்ரபந்தங்களையும் சேர்த்து அருளிச்செய்திருக்கிறார். ஆனால் 'நம்மாழ்வா ரன்றோ நமது கூடஸ்தர்? அவரை விலக்கிக் குருபரம்பரா நுஸந்தாநம் கூடுமோ?' என்று ஒரு ஸந்தேஹம் ஜநிக்கலாம். ஸ்ரீ தேஸிகன் நம்மாழ்வாரை விலக்கவில்லை. நம்மாழ்வாருக்கும் நாத

முனிகளுக்கும் காலம் அதிமாத்ரம் விப்ரக்ருஷ்ட மாகையால், எவ்விதம் இவ்விருவருக்கும் ஆசார்ய ஶிஷ்ய ஸம்பந்தம் நேர்ந்திருக்கு மென்பதை ஸந்தேஹித்தே, அடுத்த வாக்யத்தில் மூன்று காரணங்களைச் சொல்லி, ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் ஆசார்ய ரென்பதை ஸ்தாபிக்கிறார். ஸ்ரீ மதுரகவிகள் ஸாக்ஷாத் நம்மாழ்வாருடைய ஶிஷ்யர். அவருடைய வம்ஶ்யரான ஸ்ரீ பராங்குஶ தாஸர் ஸ்ரீமந் நாதமுனிகளுக்குக் கண்ணிநுண் சிறுத்தாம்பை உபதேஶித்த படியால், ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு ஸ்ரீ மதுரகவிகள் ஸம்ப்ரதாயம் உண்டென்பது ஏற்படுகிறது இது முதல் காரணம். இரண்டாவது காரணம் என்னவென்றால் : ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு ஜ்ஞாநோத்பத்தி உண்டானது 'ஆராவமுதே' என்கிற திருவாய்மொழியாலே யானதால், நம்மாழ்வார் இவருக்கு ஆசார்ய ரென்று சொல்லலாம். இது இரண்டாவது காரணம். மூன்றாவது காரணமாவது: ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு யோகதஶை யென்று ஒரு தஶை உண்டு; அப்போது ஆழ்வார் ஸாக்ஷாத்க்ருதராய் ஸர்வாபேக்ஷிதங்களையும் அவருக்கு உபதேஶித்தா ரென்பது ப்ரஸித்தம். இது மூன்றாவது காரணம் "இவருக்கு ஸ்ரீமதுரகவிகள் முதலாக உண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும், திருவாய்மொழி முகத்தாலும், யோக தஶையிலே ஸாக்ஷாத்க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்ய ரானார்" என்பது ஸ்ரீ தேஶிகனுடைய ஸ்ரீ ஸூக்தி.

நிற்க: ஸ்ரீமந் நாதமுனிகள் பஹிர்மத நிரஸநத்தில் இதம்பரமான ப்ரவ்ருத்தியைச் செய்தவர். ஆழ்வார், அவ்வளவாகப் பஹிர்மத நிரஸநத்தில் ப்ரவர்த்தித்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீ தேஶிகனுக்குப் பஹிர்மத நிரஸநத்தில் உத்ஸாஹாதிக்யம் உண்டாகையால், தம்மைப் போன்றவருக்கு அவர் ப்ராதாந்யத்தைக் கொடுக்கிறா ரென்றும் சொல்லக்கூடும்.

ஸ்ரீ தேஶிகன் இந்த ஆசார்ய பரம்பரையை ஸ்ரீ பாஷ்யகாரர் பர்யந்தமே அருளிச்செய்து, 'இவர் ஸ்ரீ பாதத்தில் ஆச்ரயித்த முதலிகளைத் தம் தாம் ஸம்ப்ரதாயப் படிகளிலே அறிந்துகொள்வது' என்று முடித்து விட்டார். ஏன் அப்படி நிறுத்திவிட்டா ரென்பதற்குக் காரணம் தேடவேண்டுவ தில்லை. ஸ்ரீ பாஷ்யகாரர் காலத்திற்குப் பிறகு கணக்கற்ற ஆசார்ய ரத்நங்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த ஸ்ரீபாஷ்ய ப்ரவசநத்தில் மூர்த்தந்யமாக ப்ரவர்த்தித்தவர்கள். இவர்களுள் பலர் உத்தமமான க்ரந்தங்கள் எழுதி நமது ஸித்தாந்தத்தை ஸ்தாபநம் செய்திருக்கிறார்கள். அவர்கள் அப்படி செய்திருக்கும் உபகாரத்தை உத்தேசித்தாவது, 'அவர்கள் யார்? என்ன க்ரந்தங்கள் அவர்கள் அநுக்ரஹித்திருக்கிறார்கள்?' என்பவைகளைத் தெரிந்துகொள்வது ப்ராப்த மாகின்றது. அவைகளை ஸங்க்ரஹமாகத் தெரிவிப்பதில் நாம் கொஞ்சம் ப்ரவர்த்திக்கிறோம்.

ஆளவந்தார் ஸ்ரீ பாதத்தில் ஆச்ரயித்த முதலிகளுக்குள் பெரிய திருமலை நம்பி என்னும் ஒரு ப்ரஹ்மவித், திருப்பதியில் திருவேங்கடமுடையானை மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார். அவருக்குப் பூமி பிராட்

டியா ரென்றும் பெரிய பிராட்டியா ரென்றும் இரண்டு ஸஹோதரிகள் உண்டு. இவர்களுள் ஜ்யேஷ்டையான பூமிப் பிராட்டியாரை ஸ்ரீ பெரும்பூதூரில் ஆஸுரி கேஶவப் பெருமாள் என்கிற ஸர்வ க்ரது தீக்ஷிதர்க்கும், இளையவளான ஸ்ரீ பெரிய பிராட்டியாரை மழலை மங்கலத்தில் எழுந்தருளி யிருந்த கமலநயந பட்டருக்கும், ஸ்ரீ திருமலை நம்பி விவாஹம் செய்வித்தார். அவர்கள் தம் தம் புக்ககத்தில் வாழுங் காலத்தில், பூமி பிராட்டியார்க்கு ஒரு புருஷ ப்ரஜை ஜநித்தது. இவரைத் திருவநந்தாழ்வான் என்று சொல்வார்கள். இவர்தான் நமது ஆசார்யராகிய ஸ்ரீ பாஷ்யகாரர். பெரிய பிராட்டியாருக்கும் ஒரு புருஷ ப்ரஜை ஜநித்தது. இவர் வைநதேயாம்ஶ மென்று சொல்லப்படுவர். குழந்தைகள் பிறந்த செய்தியை அறிந்த பெரிய திருமலை நம்பி, அந்த இரண்டு ஸ்தலத்துக்கும் எழுந்தருளி, பூமிப் பிராட்டியாருடைய குழந்தைக்கு அதன் பிதாவாகிற கேஶவப் பெருமாளைக் கொண்டு 'இளையாழ்வார்' என்னும் திருநாமத்தையும், பெரிய பிராட்டியாருடைய குழந்தைக்கு அதன் பிதாவாகிற கமல நயந பட்டரைக் கொண்டு 'கோவிந்தர்' என்னும் திருநாமத்தையும் சாத்துவித்தார்.

இந்தக் கோவிந்த பட்டர் ஒரு ஸமயம் கங்கையில் ஸ்நாநம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு லிங்கம் அவர் கையில் ஒட்டிக்கொண்டது. அதைப் பரமஶிவனுடைய ப்ரஸாத ஸூசக மென்று எண்ணி, ஶைவ மதத்தை அவலம்பித்து, 'உள்ளங்கைக் கொணர்ந்த நாயனர்' என்னும் பெயர் பூண்டு, 'காளஹஸ்தி' என்னும் க்ஷேத்ரத்தில் பரமஶிவனை ஆராதித்துக்கொண்டிருந்தார். தேவதாந்தரபரராயிருக்கும் பட்டரை எப்படியாவது திருத்திப் பணி கொள்ளவேண்டு மென்று திருவுள்ளங் கொண்டு ஸ்ரீ பாஷ்யகாரர், 'இதற்கு வேறொரு உபாயமு மில்லை; ஸ்ரீமந் நாராயணனுடைய திருக்கல்யாண குணங்களை ஸ்ரீ கோவிந்த பட்டர் காதில் விழும்படி உத்கோஷித்து வந்தால், அந்தக் கல்யாண குணங்களால் ஆகர்ஷிக்கப்பட்டவராய் அவர் ஸ்வயமாகவே திரும்பி விடுவர்' என்று ஆலோசித்து அப்படியே செய்ய, ஸ்ரீ கோவிந்த பட்டர் பகவந்நாம ப்ரபாவத்தால் ஸ்ரீ வைஷ்ணவராகி ஸ்ரீமந் நாராயணனிடத்தில் மிகுந்த பக்தி கொண்டு, ஸ்ரீ விஶிஷ்டாத்வைத பதமே மேலான மத மென்று தெளிந்த சிந்தையை உடையவரானர். வைராக்யமும் அவருக்கு வாசாம கோசரமாக இருந்து வந்தது. ஸ்ரீ பாஷ்யகாரர் அவருடைய இந்த அளவிறந்த விரக்தியைக் கண்டு ஆச்சர்யப்பட்டு, அவருக்கு ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரம் செய்வித்து, 'எம்பெருமானர்' என்று திருநாமம் சாத்தினர். அப்போது பட்டர், 'இந்தத் திருநாமம் தகாது; தக்கதாக ஒரு நாமம் அநுக்ரஹிக்க வேண்டும்' என்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ பாஷ்யகாரரும் அப்பெயரை இடைக் குறை செய்து தலையும் கடையும் கூட்டி 'எம்பார்' என்று திருநாமம் சாத்தியருளினர்.

ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ஸ்ரீ பெரிய நம்பிகளிடம் த்வயோபதேஶம்; ஸ்ரீ திருக்கோட்டியூர் நம்பிகளிடம் ரஹஸ்யார்த்தத்தின் உபதேஶம்; திருமலையாண்டானிடம் திருவாய்மொழியின் விஶேஷார்த்த க்ரஹணம்; திருமலை

நம்பி பக்கல் ஸ்ரீமத் ராமாயணம்; திருவரங்கப் பெருமா ளரையரிடம் திருவாய்மொழி உபதேஶமும் நல்வார்த்தை கேட்டலும்; பெரிய நம்பியினிடமும் திருக்கோட்டியூர் நம்பியினிடமும் உபதேஶார்த்தம் எழுந்தருளுகையில், ஸ்ரீ பாஷ்யகாரர் தமக்குத் தண்டு ஸ்தாநீயரான முதலியாண்டானையும், பவித்ர ஸ்தாநீயரான கூரத்தாழ்வானையும் அழைத்துக்கொண்டு திருக்கோட்டியூருக்கு எழுந்தருளினார். அவ்விடத்தில் திருமந்த்ரார்த்தம் சரம ச்லோகார்த்தம் இவ்விரண்டின் உபதேஶங்களும் ஸ்ரீ ஸ்வாமிக்கு நேர்ந்தன. ஸ்ரீ பாஷ்யகாரருடைய ப்ரார்த்தனையினால் ஸ்ரீ கூரத்தாழ்வானுக்கும் அந்த உபதேஶங்களை ஸ்ரீ நம்பியே உபதேசித்தார்; ஆனால் முதலியாண்டானுக்கு அவ்வுபதேஶங்கள் கிடைக்கவில்லை. பிறகு ஸ்ரீ பாஷ்யகாரரிடமே அவ்வுபதேஶங்கள் அவருக்கு ப்ராப்தங்க ளாயின. முதலியாண்டான் என்பவர் ஸ்ரீ பாஷ்யகாரருடைய பகினியாகிற கமலா தேவிக்குப் புத்ரராகப் பிறந்த பாக்யம் பெற்றவர். இவர் மஹா வித்வானாக வந்தபடியால் இவரிடத்தில் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு அளவற்ற ப்ரீதி. இவருக்குத் தாஶரதி என்றும் பர்யாய நாமம் ஒன்றுண்டு. இவர் அவதார காலம் சித்திரை மீ° புநர்வஸு நக்ஷத்ரம். கூரத்தாழ்வானுடைய அவதார காலம் தை மீ°. ஹஸ்த நக்ஷத்ரம். ஆழ்வான் ஹாரீத குல திலகர். இவர் பிதாவின் பெயர் ராமஸோமயாஜி. ஸ்ரீ பாஷ்யகாரருக்கு மற்றுமொரு பகினி உண்டு. அவள் பெயர் பூமி தேவி. இவள் வத்ஸகுல ப்ரஸித்தரான மஹாகாருணிகர் என்பவருக்கு விவாஹம் செய்யப்பட்டு, ஸ்ரீ வரத விஷ்ணுவார்ய ரென்னும் ஒரு புத்ரரைப் பெற்றாள். இவருக்கு நடாதூர் ஆழ்வான் என்றும், குலபதி யென்றும் பர்யாய நாமங்கள். இவருடைய பௌத்ரர்தான் நடாதூர் அம்மாள் என்னும் ப்ரஸித்த வித்வான்.

ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ஆளவந்தார் ப்ராசார்யர். நேரில் இருவருக்கும் ஸமாகமம் இல்லையாதலால், 'யத்பதாம்போருஹத்யாந' என்று த்யாநத்தால் தாம் கல்மஷ நிவ்ருத்தியைப் பெற்றதாக ஸ்ரீ பாஷ்யகாரர் ஸாதித்திருக்கிறார். ஸ்ரீ பாஷ்யகாரரிடத்தில் ஸ்ரீ ஆளவந்தாருக்கு, 'இவர்தாம் நம்முடைய ஸித்தாந்த ஸ்தாபகராவர்' என்னும் பூர்ண நம்பிக்கை. அதை உத்தேசித்தே மநஃபூர்வமாகக் கணக்கற்ற உபாயங்களை அவர் செய்துவந்தார். 'ஐந்து ஆசார்யர்களாலும் ஶாஸ்த்ரார்த்தங்கள் உபதேசிக்கப்படவேண்டும்' என்பதும் அவருடைய ஸம்விதான மென்று நாம் நினைக்கிறோம்.

* * * *

ஆழ்வாராசார்யர்களின் திருநாமங்களும், அவர்களின் திருநக்ஷத்ரங்களும்

ச்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணன் லோக ஸம்ரக்ஷணார்த்தம் ஹம்ஸாத்யவதாரங்களைச் செய்தும், அநாதி கர்ம வச்யர்களான ஜீவாத்மாக்களுக்குத் தமக்கு உகக்கும் உஜ்ஜீவநம் சரியாக ஏற்படாததைப் பார்த்து, தமது தேவீ பூஷணயுத பரிஜநங்களைப் பூலோகத்தில் ஆழ்வார்களாகவும் ஆசார்யர்களாகவும் அவதரிக்கும்படி திருவுள்ளம் கொண்டருளவே, அவர்கள் அத் திருவுள்ளத்தின்படியே திருவவதரித்தார்கள். அவர்களுடைய திருநாமங்களும் திருநக்ஷத்ரங்களும் நமது அநுஸந்தாநார்த்தம் கீழே குறிக்கப்படுகின்றன.

திருநாமங்கள் — திருநக்ஷத்ரங்கள்

1. பெரிய பெருமாள் [பரமாசார்யன்]
2. பெரிய பிராட்டியார் .... பங்குனி – உத்திரம்
3. ஸேனை முதலியார் .... ஐப்பசி – பூராடம்
4. நம்மாழ்வார் .... வைகாசி – விசாகம்

[நம்மாழ்வார் விஷ்வக்ஸேந ருடைய அம்ஸம்; ஸ்ரீ மதுரகவிகள் இவ்ருடைய முதல் ஸிஷ்யர்; இந்த மதுரகவிகள் விஷ்வக்ஸேந ருடைய கணாதிபதிகளுள் ஒருவராகிய ‘குமுதர்’ என்னும் நித்ய ஸூரியின் அம்ஸம்.]

மதுரகவிகளின் திருநக்ஷத்ரம்.... சித்திரை – சித்திரை

5. நாதமுனிகள் .... ஆனி – அனுஷம்

[இவர் கஜாநநாம்ஸம்; இவர் வீர நாராயண புரத்தில் ஸடமர்ஷண குல திலகராய், ‘சொட்டைக் குலத் தரசு’ என்று ப்ரஸித்தரான ஈச்வர பட்டாழ்வானுடைய புத்ரர். இந்த நாதமுனிகளுக்கு ஈச்வர முனி என்றும் ஒரு புத்ரர் இருந்தார். இந்த ஈச்வர முனிக்கு ‘உய்யக்கொண்டார்’ என்று ஒரு ஸிஷ்யர்; இவரைப் பார்த்து ஈச்வர பட்டர், ‘என்னுடைய புத்ரராகிய ஆளவந்தார் என்பவருக்கு ஸகல ரஹஸ்யங்களையும் நீர் உபதேஸிக்க வேணும்’ என்றார். ஆனால் உய்யக்கொண்டாருக்கு அந்த நியமநத்தை நிறைவேற்ற அவகாசம் நேராததால், அவர் தமது சிஷ்யரான மணக்கால் நம்பியினிடம் அந்த நியமநத்தை ஒப்புவிக்க, இந்த இரண்டு சிஷ்யர்களும் ஆசார்ய கோஷ்டியில் சேரும்படி ஸம்பவித்தது]

6. உய்யக்கொண்டார் [புண்டரீகாக்ஷர்] .... சித்திரை – கார்த்திகை
7. மணக்கால் நம்பி [ராம மிச்ரர்] .... மாசி – மகம்
8. ஆளவந்தார் [யாமுநாசார்யர்] .... ஆடி – உத்திராடம்

[பாஷ்யகாரருடைய ஐந்து ஆசார்யர்களும் இவரை ஆச்ரயித்தவர்கள்.]

9. பெரிய நம்பி [மஹா பூர்ணர்] .... மார்கழி – கேட்டை
10. ஸ்ரீ பாஷ்யகாரர் [இளையாழ்வார்] .... சித்திரை – திருவாதிரை

கோவிந்த பட்டர் [வைநதேயாம்ஸம்] ... தைப் பூசம்

முதலியாண்டான் [தாஸரதி] ... சித்திரை–புநர்பூசம்

கூரத்தாழ்வான் [ஸ்ரீ வத்ஸ சிந்ஹர்] .... தை – ஹஸ்தம்

கோவிந்த பட்டர் [இவர்தான் யாதவ ப்ரகாஸர் என்று ஸ்ரீ பாஷ்யகாரருடைய குருவாக இருந்தவர்; ஸ்ரீ பாஷ்யகாரருடைய சிஷ்யராக வந்த பிறகு, இவர் பெரிய ஸ்ரீவைஷ்ணவராகி, ஸந்யாஸாச்ரமம் பெற்று, ‘கோவிந்த ஜீயர்’ என்னும் பெயருடன் சில நாள் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸந்நிதியி லிருந்து, பிறகு திருநாட்டுக்கு எழுந்தருளினார். ‘யதி தர்ம ஸமுச்சயம்’ என்பது இவர் செய்தருளிய க்ரந்தம்]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு

[21—4—49 முதல் 20—5—49 வரை]

			ரூ.
34	ஸ்ரீ. A. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீரங்கம் (49)	....	3
43	,, S. S. ராஜகோபாலன், பம்பாய் (49)	....	3
59	,, A. ரங்காசார்யர், காரைக்குடி (49)	....	3
194	,, A. B. குப்புஸாமி ஐயங்கார், அரியூர் (49)	....	3
224	,, T. N. வானமாமலை ஐயங்கார், ராமநாதபுரம் (49)	....	3
251	,, N. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கரூர் (49)	....	3
779	,, K. R. ஸௌம்யநாராயணன், கும்பகோணம் (49)	....	3
839	,, V. R. சாரி, பீஹார் (49)	....	3
		மொத்தம் ரூ.	24

Regd. M. 4437.

தமிழகத்தில் சிறுவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லௌகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

*இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜும்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.*

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

சார்ஜுகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ. 20.
,, உட்புறம்	,,	,,	ரூ. 15.
ஸஞ்சிகையின் உட்புறம்	,,	,,	ரூ. 10.

ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், மதராஸ்-17.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.